பக்கங்கள்-16 | 20.பங்குனி.2022 | விலை–40.00

தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –377



பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182

கலையரசி நகைமாடம்



புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.

T.P- 0774357193




# நல்லாட்சி அரசாங்கத்தின் நாடக அரசியல்

## இலங்கை அரசு பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீள்வதற்கு தமிழருக்கு சம உரிமையை வழங்கவேண்டும்

# ஆட்சிமாற்றம் தமிழ்த்தரப்பிற்கு சாதகமா?

# அமெரிக்கா,சீனா,இந்தியாவின் பிடிக்குள் இலங்கை

# நல்லாட்சி அரசாங்கத்தின் நாடக அரசியல் – இரணியன்



இன்றைய நாட்டின் நிலைமை தொடர்பாக மக்கள் பெரும் இக்கட்டான சூழ்நிலைகளை சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையிலே தற்பொழுது இருக்கின்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டை இன்று பார்க்கும் பொழுது நல்லாட்சி அரசாங்கத்திலே ஒருசில விடயங்கள் இந்தநாட்டில் இடம்பெற்றது. நல்லாட்சி அரசாங்கத்தை பொறுத்தவரையிலே மாவீரர் தினம் அனுஷ்டிப்பதற்கு அல்லது முள்ளிவாய்காலிலே இறந்தவர்களை நினைவு கூறுவதற்கெல்லாம் நல்லாட்சி அரசாங்கம் ஒரு வழிகளை திறந்துகொடுத்திருந்தது. நல்லாட்சி அரசாங்கத்தினுடைய செயற்பாடுகளை விரும்பாத தென்னிலங்கை அரசியல் தலைமைகள் திடீரென வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை நல்லாட்சி அரசாங்கம் வழங்கிவிடும் அல்லது வடகிழக்கை இணைத்துவிடும் என்றவொரு காரணத்தினால் திடீரென சிங்கள மக்களிடையே குரோதத்தை உருவாக்கி அதனூடாக நல்லாட்சி அரசாங்கத்தை கவனிப்பதற்கான நடவடிக்கைகளை கலகொட ஞானசாரதேரர் பொதுபலசேன இவ்வாறான தலைவர்களுடன் இந்த அமைப்புக்களும் சேர்ந்து ஒரு தனிப் பெரும்பான்மையை சிங்கள தேசத்தினால் அமைக்க முடியும் என்ற தோரணையில் அவர்கள் செயற்பட்டார்கள்.

அதனுடைய அடுத்தகட்ட விளைவு தான் இன்று கொரோனா வைரஷின் காலப்பகுதியிலே ஆட்சி மாற்றம். இந்த நாட்டில் ஏற்பட்டு தனிப்பெரும்பான்மைக்கு ஓரிரு ஆசனங்களே குறைந்த வகையில் அவர்கள் தமிழ் முஸ்லிம்களை இணைக்காது தமிழ் முஸ்லிம்கள் தேவையில்லை என்றவொரு நிலைப்பாட்டிலே அவர்கள் இந்த அரசாங்கத்தை தற்பொழுது அமைத்திருக்கின்றார்கள். எனவே தற்பொழுது இந்த அரசாங்கத்தில் ஒரு குழப்பம் ஏற்பட்டு வாசுதேவ நாணயக்கார உட்பட பலர் கம்பன்வெல மற்றும் அவருடன் சேர்ந்த பலரும் அதிலிருந்து விலகி சென்றிருக்கின்றார்கள். எனவே தொடர்ந்தும் அந்த அமைச்சில் இருப்பது தங்களுக்கு உகந்ததில்லை என அவர்கள் விலகிச் சென்றிருக்கின்றார்கள். இன்று எரிசக்தியின் பிரச்சனை இருக்கின்றது பால்மாவினுடைய விலையேற்றம் இன்னும் அத்தியாவசிய பொருட்களுக்கு விலையேற்றம் ஏற்பட்டிருக்கின்ற இந்த காரணத்தினால் நல்லாட்சி அரசாங்கத்துடன் ஒப்பிடும் பொழுது உண்மையில் பாரிய சூழலை தான் இந்த நாடு சந்தித்திருக்கின்றது. அதனை பார்க்கின்ற பொழுது தமிழ் மக்களுக்கான இனப்படுகொலையின் தீர்வு என்ற அடிப்படையிலே நல்லாட்சி அரசாங்கத்தினூடாக நகர்வுகளை கொண்டு செல்லக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றது. ஆனால் தற்பொழுது அதனை நகர்த்திக்கொண்டு செல்ல முடியாத ஒரு சூழல் ஏற்பட்டிருக்கின்றது. எனவே ஒரு ஆட்சி மாற்றம் இந்த நாட்டில் உருவாகுவதாக இருந்தால் கடந்த காலத்தில் செயற்பட்ட மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான நல்லாட்சியைப் போன்று அமைப்பதற்கு வடகிழக்கில் இருக்கக்கூடிய தமிழ் தரப்பு தயாராக இருக்கின்றதா அல்லது முஸ்லிம் தரப்பு தயாராக இருக்கின்றார்களா என்றால் நிச்சயமாக அவர்கள் தயாராக இருக்கின்றார்கள். அதுபோன்று அடுத்த தரப்பை பார்க்கும் பொழுது முஸ்லிம்களுக்கு உகந்த ஒரு தலைமைத்துவத்தை கொடுப்பதற்கு இந்த நல்லாட்சி அரசாங்கம் முக்கிய பங்கு வகித்தது. முஸ்லிம்கள் அந்த காலகட்டத்தை பயன்படுத்தி தான் நல்லாட்சி அரசாங்கத்திலே முஸ்லிம்களால் ஒரு தீவிரவாத தாக்குதல் இந்த நாட்டிலே இடம்பெற்றது.

இன்று முஸ்லிம்களை ஒரு அடக்குமுறையாக கொண்டு வந்து அவர்களுடைய அமைச்சுப் பதவிகள் அனைத்தும் பறிக்கப்பட்டு அமைச்சுப் பதவிகளை கொடுப்பதில்லை என்ற நிலையிலே முதுகெலும்பற்ற அமைச்சை அதாவது நீதி அமைச்சை அலிசம்ரியிடம் கொடுத்திருக்கின்றார்கள் அலிசப்ரி அவர்கள் ஒன்றுக்கும் உதவாதவராக தற்பொழுது செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார். அவரால் எதுவுமே செய்ய முடியாது. அதாவது பல்லு பிடுங்கிய பாம்பாகவே அலிசப்ரி அவர்கள் இந்த அரசாங்கத்திலே இருக்கின்றார். ஏனைய முஸ்லிம் தலைவர்கள் சிலரும் இந்த அரசாங்கத்திற்கு வக்காளத்து வாங்கிக்கொண்டு இருக்கின்றார்கள் ஆனால் இந்த சூழ்நிலையிலே எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் தமிழ் மக்கள் தீர்வு தொடர்பிலே அல்லது சிறுபான்மையினுடைய தீர்வு தொடர்பிலே அவர்கள் பெற்றுத்தருவதற்கான முன்னெடுப்புக்களை இதுவரை எடுக்கவில்லை.

டட்லி சேனாநாயக்க தொடக்கம் கோட்டபாய ராஜபக்ச வரை வந்த இந்த அரசுகள் ஒவ்வொன்றும் தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுத்தரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. இருந்தும் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் 1995 ஆம் ஆண்டு ஆட்சிக்காலத்தின் அடுத்த அடுத்த காலப்பகுதிகளிலே நல்லதொரு தீர்வுக்கு அவர் ஒரு முனைப்பை ஏற்படுத்தினார் அதுவும் இல்லாமல் போய்விட்டது. தற்பொழுது 13 ஆம் திருத்த சட்டத்தின் ஊடாக ஒரு தீர்வை கொண்டுவர முடியுமாக இருந்தாலும் அந்த 13 ஆம்திருத்தசட்டத்திற்கும்ஒருமுற்றுப்புள்ளியை வைத்து அல்லது வடகிழக்கு இணையாமல் அல்லது அதில் புதிய திருத்தங்களை கொண்டுவந்து நடைமுறையை ஏற்படுத்த வேண்டும் என்று தற்பொழுது இருக்கும் அரசாங்கம் முனைகின்றது. எனவே இந்த நல்லாட்சி அரசாங்கத்தை போன்று மற்றுமொரு அரசாங்கத்தை தமிழ் தரப்பும் அல்லது ஏனையவர்களும் தற்பொழுது இந்த பிரச்சனைகளை எதிர்கொள்கின்றார்கள். அதாவது தென்னிலங்கையிலும் இவ்வாறான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. வடகிழக்கில் மட்டுமல்ல யுத்த காலத்தில் இதைவிட மிக மோசமாக இருந்த பொழுதிலும் அங்கு எரிபொருட்கள் பால்மாக்கள் அனைத்தும் விடுதலைப்புலிகளுடைய கட்டுப்பாட்டுக்குள்ளே கொண்டுவரப்பட்டது. அது விலை கூடுதலாக இருந்தாலும் அதை வாங்கக்கூடிய சூழ்நிலை அங்கு உருவாக்கப்பட்டிருந்தது. ஒரு சவர்க்காரம் 1000 ரூபாய்க்கு வாங்கினார்கள் ஒரு லீற்றர் டீசல் 2000 ரூபாய் 5000 ரூபாய் என்ற ரீதியிலும் விற்கப்பட்டது. இப்படியெல்லாம் வாங்கிய காலம் இருந்தது. தற்பொழுது இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற இந்த நிலைமைக்கு மகிந்த குடும்பம் பசில் ராஜபக்ச, நாமல் ராஜபக்ச, மகிந்த ராஜபக்ச போன்றோர் தான் காரணமாக இருக்கின்றார்கள் என இன்று பலரும் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

ஆகவே இந்த அரசாங்கத்தை மாற்றியமைப்பதாக இருந்தால் ஒரு சிக்கல் இருக்கின்றது சீனாவிற்கு அடிபணிந்தவர்களாக இந்த அரசாங்கம் சீனாவிடம் கடனை வாங்கிக்கொண்டவர்களாக இவர்கள் இருக்கின்றார்கள். கடனை இவர்கள் எவ்வாறு செலுத்தப்போகின்றார்கள் போர்சிற்றி சம்பந்தமான விடயங்கள், அம்பாந்தோட்டை துறைமுகம் போன்ற விடயங்கள் இவ்வாறு அனைத்திலும் தங்களுடைய முதலீடுகள் இந்த இலங்கைக்குள் தாரை வார்க்க இடம்கொடுத்திருக்கும் இந்த அரசாங்கம் எப்படி இதிலிருந்து மீளப்போகின்றது என்ற கேள்வி பலருக்கும் இருக்கின்றது. ஆனாலும் இன்று பொருளாதார தடை என்னும் பொழுது இந்த நாட்டிற்குள்ளே கிட்டத்தட்ட 223 பொருட்களுக்கு மேல் தற்பொழுது தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு வருமான வரி கூட்டப்பட்டிருக்கின்றது அத்தியாவசியப் பொருட்களுக்கான விலையேற்றம் ஏற்பட்டிருக்கின்றது இவ்வாறு அவர்கள் விலைவாசிகளை கூட்டிக்கொண்டு சென்றால் இந்த அரசாங்கம் ஒரு நலிவடைந்த அல்லது இதனை கொண்டு செல்ல முடியாத ஒரு முதுகெலும்பற்ற அரசாங்கமாக இந்த அரசாங்கம் திகழ்கின்றது என்பதையே வெளிச்சம் போட்டு காட்டுகின்றது. எனவே மைத்திரிபால சிறிசேன போன்ற தலைவர்களை கொண்டுவருவதன் ஊடாக அக்காலகட்டத்தில் தமிழ் மக்களுக்கான சுபீட்சமான சுமூகமான ஒரு சமிஞ்சைகளை அவர்கள் கொடுத்துக்கொண்டே தான் இருந்தார்கள். தென்னிலங்கையிலே ஒரு இனவாதத்தை விதைத்து தான் இந்த நல்லாட்சி அரசாங்கத்தை அவர்களால் கவிழ்க்க முடிந்தது. ஏனென்றால் நல்லாட்சி அரசாங்கத்தை பொறுத்தவரையிலே தமிழ் மக்களுக்கான தீர்வை கொடுக்கப்போகின்றார்கள் அல்லது ரணில் கொடுக்கப்போகின்றார்கள் அல்லது மைத்திரி பால சிறிசேன கொடுக்கப்போகின்றார் சந்திரிக்கா அவர்கள் கொடுக்க போகின்றார் என்று போலிப் பிரச்சாரங்களில் ஈடுபட்டு சிங்கள தமிழ் முஸ்லிம் மக்களிடையே ஒரு மதவாதத்தையும் இனவாதத்தையும் தேசியவாதத்தையும் விதைத்து தான் இந்த அரசாங்கம் வெற்றி பெற்றது. எனவே தற்பொழுது இலங்கை அரசானது பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கின்ற நிலையிலே இதனை சீர் செய்வதற்கு மக்களாகிய நாங்களும் கட்சி பேதங்களை மறந்து செயற்படுவதன் ஊடாகத்தான் இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும்.

இந்த நாட்டுக்குள் பொருளாதார ரீதியான கட்டமைப்பை உருவாக்குவதற்கு ரணில் அல்லது மைத்திரிபால சிறிசேன போன்றவர்களுடைய பங்களிப்பு அதுபோன்று தமிழ் தரப்பினுடைய பங்களிப்பு முஸ்லிம் தரப்பினுடைய பங்களிப்பு இருப்பதனூடாகத்தான் இந்த வியாபார நோக்கத்தினூடாக வர்த்தகத்தை உயர்த்தும் வகையிலே இவர்களால் செயற்பட முடியுமே தவிர இந்த அரசாங்கம் ஒரு யுத்த வெறி பிடித்த அரசாங்கமாக அல்லது ஒரு மதவாத இனவாத போக்கைக்கொண்டு இந்த அரசாங்கம் தொடர்ந்தும் செயற்படுமாக இருந்தால் அதற்கு சாத்தியப்படுத்த முடியாது. அதனோடு வெளிநாடுகளில் இருக்கின்ற டயஸ்போராக்களை உள்வாங்கி டயஸ்போராக்களினூடாக முதலீடுகளை எடுக்கும் நடவடிக்கைகளை கூட இந்த நல்லாட்சி அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுத்திருந்தது. அதில் பலர் முதலீடுகளை ஈட்டிக்கொண்டிருந்த பொழுது தற்பொழுது இருக்கக்கூடிய கோட்டபாய ராஜபக்சவினுடைய அரசாங்கம் ஒரு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அவர்களை கைதுசெய்து அல்லது அவர்களின் பணப்பறிமாற்றங்களை முடக்கியதன் ஊடாக இந்த பொருளாதாரத்தின் சரிவு ஏற்பட மிக முக்கியமான காரணமாக அமைந்தது. அதுபோன்று சஹரானினுடைய குண்டுத்தாக்குதலின் பின்னர் இந்த நாட்டை கட்டியெழுப்புவதும் பாரிய சிக்கலாக இருந்தது. முஸ்லிம் தரப்பு அவர்களுடைய வியாபாரங்களை ஸ்தம்பிதம் அடையச் செய்து அவர்களுடைய பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களுக்கான அடிப்படை உரிமைகளை பறிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்ற பொழுது இந்த முஸ்லிம் நாடுகளே இலங்கையை கைவிடுகின்ற சூழல் உருவாக்கப்பட்டது.

தற்பொழுது இந்தியாவை பொறுத்தவரையில் உங்களுக்கு உதவி செய்கின்றோம் என்று கூறும் போதும் சீனா அமெரிக்காவினுடைய தலையீடுகள் இந்த நாட்டில் இருக்கின்ற காரணத்தினால் அவர்களுடைய நட்புறவை இலங்கை அரசு துண்டிக்க வேண்டும் அவ்வாறு இருந்தால் தான் இந்தியா இந்த நாட்டிற்கு அனைத்து ரீதியிலும் பொருளாதார உதவிகளை செய்யும் என அவர்கள் முன்வைத்திருக்கின்றார்கள்.

எனவே சுயலாபம் கருதி இந்த நாட்டுக்குள் இருக்கின்ற நாடுகள் ஒவ்வொன்றும் இலங்கையை எவ்வாறு ஒரு இக்கட்டான சூழ்நிலைக்குள் கொண்டு செல்ல வேண்டும். தங்களுடைய சுயலாப அரசியலை எவ்வாறு இங்கு மேற்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டிலே அவர்கள் செயற்படுகின்றார்கள். தமிழ் மக்களுக்கான இனப்பிரச்சனையில் இருந்து அல்லது இனவாத யுத்தத்தில் இருந்து போர் சூழல் அற்ற தற்பொழுது இருக்கும் போராட்டம் மௌனிக்கப்பட்ட சூழ்நிலையிலே தொடர்ந்தும் மக்கள் வடகிழக்கிலே போர் இருந்த காலகட்டத்திலும் விட பொருளாதார ரீதியாக மிகவும் பாதிப்படைந்த மக்களாக இந்த நாட்டில் இருக்கின்றார்கள். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலகட்டத்தில் அவ்வாறு இருந்தது. ஆனால் இலங்கையை பொறுத்தவரையிலே சிங்கள மக்கள் அந்த காலகட்டத்திலே அனைத்து பொருளாதார ரீதியிலும் நன்றாக அவர்களின் வளங்கள் இருந்தது. இப்படி பெற்றோல் விலையோ டீசல் விலையோ அதிகரிக்கவில்லை. யுத்த காலத்தில் கூட அவ்வாறான ஒரு சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

ஆகவே நல்லாட்சி அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிப்பதன் ஊடாக நல்லாட்சி அரசாங்கத்தினுடைய முன்னெடுப்புக்களை தமிழ் தரப்பு ரெலோ புளொட் ஈபிஆர்எல்எப் ஈபிடீபி மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தமிழர் விடுதலை கூட்டணி போன்ற கட்சிகளும் ஒருங்கிணைந்து இந்த நிலைமையை உருவாக்குவதன் மூலமாக அரசாங்கத்துடன் பேசி ஒரு நல்லாட்சி அரசாங்கம் ஒன்றை உருவாக்கி அல்லது இவர்களுக்கு எதிரான ஒரு நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்து இந்த அரசாங்கத்தை கலைத்து ஏதோவொரு வகையிலே இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு இவர்கள் நிச்சயமாக முன்வருவதன் ஊடாகத்தான் இந்த நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும். இன்று கடலோர பாதுகாப்பு. தேசிய பாதுகாப்பு என்பது ஸ்தம்பிதம் அடைந்த நிலையிலே இன்று பன்னாட்டு புலனாய்வாளர்கள் இந்த நாட்டுக்குள்ளே காலடி எடுத்து வைத்திருக்கின்றார்கள் அவர்கள் தங்களுடைய புலனாய்வு நடவடிக்கைகளை துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். ஆனால் எங்களது நாடு இன்னும் குட்டிச்சுவராக சென்றுகொண்டிருக்கின்றது. அபிவிருத்தியடைந்த நாடுகள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகள் அல்லது தற்பொழுது உலகளாவிய ரீதியிலே உக்ரேனின் தாக்குதலின் பின்னர் ஏற்பட்டிருக்கின்றது. உலக சந்தையிலே 60 சதவீதமான வீழ்ச்சி உக்ரேன் நாட்டினுடைய தாக்குதலின் பின்னர் ஏற்பட்டிருக்கின்றது.

11 ஆம் பக்க பார்க்க...

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## வீதிக்கு இறங்கிய மக்களும், நெருக்கடியில் அரசும்

கொவிட் வைரஸ் பரவலுக்குப் பின்னரான இலங்கையின் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சி கண்டிருந்த நிலையில், இன்றைய ரஸ்யா - உக்ரைன் நாடுகளுக் கிடையிலான யுத்தம் மேலும் இலங்கையில் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது.

மக்களது வாழ்க்கைச் செலவு முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு உயர்ந்துள்ளது. பெரும்பான்மை சிங்கள மக்களால் தாம் பதவிக்கு வந்ததாக கூறிக்கொண்டிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தரப்பினரது ஆட்சிக்கு எதிராக சினமடைந்த மக்கள் வீதிகளில் இறங்கியுள்ளனர். நாட்டில் மின்சாரத் தடை, சமையல் எரிவாயு தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு, அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு என மக்கள் பெரும் துன்பங்களைச் சந்தித்து வருகின்றனர்.

இறக்குமதிக்குத் தேவையான டொலர் கையிருப்பில் ஏற்பட்ட பற்றாக்குறை இலங்கை அரசை கடும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளதுடன் அண்டை நாடுகளில் மக்களின் உணவுப் பிரச்சினையை தீர்ப்பதற்காகவும் நாட்டினை நடத்திச் செல்வதற்காகவும் பெருமளவில் கடன்களைப் பெற்று வருகின்றது.

இந்த நிலையில் நாட்டின் தற்போதைய ஆளும் கட்சி மற்றும் அரசின் பங்காளிக் கட்சிகளுக்கிடையில் குழப்பங்கள் உருவாகியுள்ளது. நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி அமைச்சர்களை பதவி நீக்கம் செய்த விடயம் தீயாக வெடித்துள்ளது. குடும்ப ஆட்சி தொடர்பிலும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மக்களுக்கான தீர்வுகளை வழங்குவது ஒருபுறமிருக்க, மறுபக்கத்தில் அரசைக் கொண்டிழுப்பதே பெரிய தலையிடியாக ஜனாதிபதிக்கு மாறியுள்ளது.

இந்த அரசின் செயற்பாடுகள் நாட்டின் அனைத்துத் தரப்பினராலும் விமர்சனத்திற் குள்ளாகியுள்ளது. கட்சி பேதமின்றி நாட்டின் அரசியற்கட்சிகள் வீதிகளில் மக்களையும் ஒன்றுதிரட்டி அரசிற்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஆட்சிமாற்றம் குறித்துப் பேசும் நிலை வந்துள்ளபோதிலும், மக்களது நலனைக் கருத்திற்கொண்டு உடனடியாக அரசு தேவையான நடவடிக்கைகளைச் செய்ய வேண்டும்.

தாமதித்தால் மக்களது போராட்டங்கள் வலுக்கும். இதனால் நாட்டில் குழப்பங்கள் அதிகரித்து நாட்டின் அரசியலில் மாற்றங்கள் கூட ஏற்படலாம் என்பதே இன்றைய யதார்த்தம்.

# 182 உலக வரலாற்றில் குறுஞ்சமர்



அவர்கள் வேதனைகளுடன் சூழ்நிலையை மாற்றுவதற்கு முயற்சித்துக் கொண்டிருப்பார்கள். எதிர்ப்பியக்க உறுப்பினர்கள் அதனது தலைமைத்துவத்தால் அரச தரப்பின் தண்டனை முறைக்குள் செல்லா மலிருப்பதற்காகத் தடுத்து வைக்கப்படுவதுடன் தளர்ச்சிப் போக்குடையவர்கள் உயிர்ப்பலிக்கும் ஆளாகின்றனர்.

குற்றச்செயல் புரிகின்ற அமைப்புக்களுடன் தொடர்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. கொள்ளையர் - உண்மையான வலிமை கொண்டவர்கள். எதிர்ப்பியக்கம் அவர்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கின்றது அல்லது இரு தரப்பினருக்கும் பயன்தரும் வகையிலான தொடர்பையேனும் உருவாக்க முடியுமா எனப் பார்க்கின்றது. ஒரே நேரத்தில் சதித்திட்டங்கள் ஆழமாகிக் கொண்டிருந்ததுடன், ஒருங்கிணைந்த நம்பகமின்மையும் சந்தேகமும் அதிகரிக்கத் தொடங்கின.

இது உளவியல் கோட்பாடுகளிலிருந்து தோற்றம் பெறுகின்றது. அதாவது எவ்வளவுக்கு வலிமைமிக்க தலைவனோ, அவ்வளவுக்கு அதிகமாக அவனுக்கு வாழ்வுத் தாகம் (அவனது சொந்த வாழ்வும்) இருக்கும். சம்பவங்களின் நகர்வுகளை அவதானிக்க முடியவில்லை என்ற நம்பிக்கை கொண்ட கூடுதலான கெரில்லாக் கட்டளையாளர்களும் குற்றச்செயல் புரியும் அமைப்புக்களின் தலைவர்களும் எவ்வாறு இனிமேல் வாழ்வதுஎன்பதுபற்றிச் சிந்திக்கின்றனர். தமது வாழ்க்கை, சுதந்திரம் ஆகியனவற்றைப் பெறுவதற்காக அரசின் தீவிர முகவர்களாக மாறுவதே தங்களுக்கு எஞ்சியுள்ள ஒரேயொரு தீர்வாக அவர்கள் கருதுகின்றனர்.

கடந்த நூற்றாண்டின் நாற்பதுகளின் கடைசியிலும் ஐம்பதுகளின் ஆரம்பத்திலும் உக்ரேனியத் தேசியவாதிகள்-உக்ரேனியக்கெரில்லா இராணுவ அமைப்பின் நகரிலுள்ள இரகசிய நடுத்தரத் தலைவர்கள் சரணாகதியானதுடன், எஞ்சியுள்ள போராளி அமைப்பினர் காட்டில் மறைந்திருந்த டங்களுக்குப் படைகளை அழைத்தும் சென்றனர். பிரசித்தி பெற்ற தலைவர்கள், மிக அவதானமானவர்கள், சந்தேகத்திற் கிடமானவர்கள், மிகவும் ஆபத்தானவர்கள் போன்றவர்களை உயிருடன் பிடிக்காமல் அவ்விடத்திலேயே கொல்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. கூடுதலாக அழிப்புச் சம்பவங்கள் கிராமிய ஒன்றுகூடல், சந்திப்பு, கூட்டம் போன்றவற்றின் பின் மேற்கொள்ளப்பட்டது. அதுவும் குறிப்பாக உத்தியோகபூர்வ நிகழ்வின் பின் மேசையிலமர்ந்து அருந்தத் தொடங்குகின்ற தருணத்திலாகும். சகலரும் நன்றாகக் குடித்தபின், போதையில் தள்ளாடிக்கொண்டிருக்க முகவர் அவர்களைச் சுட்டுக்கொல்வான். அல்லது வாயிலுக்கு இயற்கைத் தேவைக்காக வருபவர்களைச் சந்தடியின்றிக் கத்தியால் கொல்வான். வேறு முறை உத்திகளும் கைக்கொள்ளப்பட்டன. சில வேளைகளில் எதிர்ப்பியக்கத்தினுள் ஊடுருவிய சிறப்பணியைச் சேர்ந்த எகேர் அல்லது நடவடிக்கையாளன் இதனை மேற்கொண்டான்.

ஆனாலும் கூடுதலான சமயங்களில் அரசிடம் மன்னிப்பைப் பெற்றுக்கொண்ட தலைவன் அதற்குள் இருந்து செயற்பட்டுள்ளான். இவர்கள் ஓநாய்கள் மத்தியில் வசிக்கின்ற ஓநாய்களாவர். மிகவும் பெறுமதிமிக்க முகவர்களாக இருந்தனர். இவர்கள் சிறப்பணியிலுள்ள பணியாளர்களைவிட மிக முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக இருந்தனர். பழைய நடவடிக்கைப் பணியாளர்களில் ஒருவர் தெரிவித்தது யாதெனில் இவ்வாறான ஓநாய்களின் துணையுடன் சிறப்புப் பற்றாலியன் மேற்கொண்ட நடவடிக்கையொன்றின் போது அதற்குத் தலைமைவகித்த பாதுகாப்பு அமைச்சு ஜெனரல் திட்டத்தை விளக்கும் போது, "உங்களில் ஒருவன் சுட்டுக் கொல்லப்படுவானானால், அவன் நாசமாகப் போகட்டும். ஆனால், இவன் (ஓநாய்) கொல்லப்படுவானானால் நீங்கள் யாவரும் இராணுவ நீதிமன்றுக்குச் செல்வீர்கள்" என எச்சரிக்கை செய்தார்.

இவ்வாறான சில ஓநாய்களின் கைங்கரியத்தால் நூற்றுக் கணக்கானோர் சரணாகதி யடைந்துள்ளதுடன், அவர்கள் சில பத்துக்கள் வரையான தமது பழைய சகபாடிகளைச் சுட்டுக்கொன்றும் உள்ளனர். ஸ்டாலினிடமிருந்து ஓநாய்களுக்கு மன்னிப்பும் கிடைத்தது. இவர்களில் சிலர் இன்றும் உயிருடன் இருக்கின்றனர். சிலரோ தமது சொந்தக் குடும்பப் பெயருடனும் வாழ்கின்றனர். ஸ்டாலின் புதிதாக எதனையும் திட்டமிடவில்லை. இவ்வாறே காலங்காலமாக நடந்தேறியது. சிறப்புப் பிரிவின் முயற்சியால் கெரில்லா அரசியல் அமைப்புக்கள் எப்பொழுதும் அரைப்பலமாகும் நிலைக்கு மாற்றப்பட்டன. அரசைப் பொறுத்தவரையில் ஆபத்தற்றவையாகவே இவை இருந்தன. காட்டுச்சமரில் யாரிடம் சகிப்புத்தன்மையும் தாங்குசக்தியும் இருக்கின்றதோ அவனே வெல்வான். தயார்ப்படுத்தலுக்கு உள்ளாகாத குடியானவனைவிட, தயார்ப்படுத்தப்பட்ட வேவுக்காரனுக்கு சகிப்புத்தன்மையின் அளவு எப்பொழுதும் உச்சமாகும். சகிப்புத்தன்மையினளவு - இது நீண்ட நேரம் பட்டினி, குளிர், வேதனை ஆகியவற்றுடன் நித்திரையின்றி, அடிப்படை வசதியின்றி இருக்கும் திறனாகும். ஆனால் பயிற்றுவிக்கப்பட்ட நிபுணனிடத்தில் சகிப்புத்தன்மை எல்லையற்ற அளவில் இருக்கின்றது. பொருள் விநியோகமும் நல்ல முகாம்களும் இருப்பதே காட்டுப் போரின் போக்கைத் தீர்மானிக்கின்றன. சிறப்பணிகளின் பலமான நிலைகள் எப்பொழுதும் இரகசியமாகவே வைக்கப்பட்டன. அத்துடன் இராணுவப் பொருட்களுக்கான பிரிவுகள் சமர் நடைபெறுகின்ற இடங்களிலிருந்து தொலைவில் மறைப்பாகவும் இருந்தன. அங்கே ஓய்வுக்கானதும் மீளக்கட்டி யெழுப்புவதற்குமான வசதிகள் (மருத்துவமனை, குளியலறை, சமையற்கூடம்) இருந்தன. சிறப்பணிப் பணிக்காக வெளியேறுவது இரவில் மாத்திரமே நடந்தேறியது. அதாவது மூடிய வாகனங்களில் எகேர்கள் காடுகளுக்குள் கொண்டுசென்று (ஒருபோதும் ஒரே இடத்தில் மறுபடி விடப்படுவதில்லை) விடப்பட்டனர். கிட்டத்தட்ட20-25கி.மீதொலைவிலுள்ள தேடுதல் மேற்கொள்ளவுள்ள இடத்திற்கு மறைப்பாகக் கால்நடையாகச் சென்றனர். தமது செயற்பாட்டுக் காலப்பகுதி முடிவடைய அதே வாகனம் அவர்களைக் குறித்து வைத்த இடத்திற்குச் சென்று ஏற்றிக்கொள்கின்றது. இடமும் காலமும் ஒருபோதும் ஒரே மாதிரியானதாக இருக்கவில்லை. இவை திரும்பிக்கொண்டிருக்கின்ற சிறப்பணிக்குத் தொலைத்தொடர்புக் கருவி மூலம் தெரியப்படுத்தப்பட்டன.


சிறப்பணி கண்டுகொள்ளப்பட முடியாததாகவும் இயங்குதிறன் கொண்டதாகவும் இருக்கவேண்டும். இது அதனது ஆளணியை 15 - 16 வரையான ஆட்களாகமட்டுப்படுத்தியது. கூடியளவிலான ஆட்களாக இருந்தால், காட்டில் அவர்கள் யானை சென்ற பாதைபோலப் பாதைத் தடயத்தை உருவாக்கிவிடுகின்றார்கள்.

(சிலவேளைகளில் எதிரியைப் பொறிக்குள் அகப்படச் செய்வதற்காகச் சிறப்பாக இவ்வாறான பாதை உருவாக்கப்படுகின்றது). குழு அவசியம் பலமானதாக ,ருக்க வேண்டும். ஆகவே தான் வலிமைமிகு வெடிபொருளைக் கொண்ட (7.62 * 53 சோவியத் ரசியா, 7.92 * 57 மாவுசர், ,ன்றைய காலத்தில் 7.62 * 51 நேட்டோ) காட்டுச் சமரில் குறுந்தூரத்தில் (கிட்டத்தட்ட 200 மீற்றர்) பிரதான காப்புக்களை (காட்டு மரங்கள்) ஊடறுக்கவல்ல மூன்று இயந்திரச் சுடுகலன்கள் வழக்கமாகப் படைக்கலன்களுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டன. ஏன் மூன்று இயந்திரச் சுடுகலன்கள்? ஏனெனில் முற்றுகையின் போது மூன்று ஆயுதங்களால் சுற்றிவரச் சூடுகளை மேற்கொள்ளலாம். முற்றுகையை உடைக்கும் போது ஒன்றுகுவிந்த சூட்டினால் எதிரியின் வியூகத்தினூடாகப் பாதையெடுத்து வெளியேறலாம்.

நீண்ட நாள் (ஒரு மாதமும் அதற்குக் கூடுதலாகவும் இருந்திருக்கின்றார்கள்) நடவடிக்கைக்காகக் காடுகளுக்குள் விடப்பட்ட குழுக்களின் வாழ்வாதார விநியோகத்திற்காகக் கூடியளவான பொருட்கள் (வெடிப்பொருட்கள், உணவுப்பொருட்கள், மருத்துவப் பொருட்கள்) தேவையாகவிருந்தன. சகல பொருட்களையும் அவர்கள் தங்களுடன் எடுத்துச்செல்வதில்லை. அவர்கள் கண்டுகொள்ளப்பட முடியாத இடங்களில் பிரதான, மேலதிக அடிப்படை முகாம்களைக் கட்டியமைத்தார்கள்.

தொடர்வான்....

# அமெரிக்கா, சீனா, இந்தியாவின் பிடிக்குள் இலங்கை



அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை வல்லரசு நாடுகள் தமது பிடிக்குள் சிக்கவைப்பது என்பது இவ்வுலகில் புதிய விடயமல்ல. அந்த வகையில் தான் ஆசியாவின் அதிசயமான இலங்கைத் தீவு இன்று அமெரிக்கா, சீனா, இந்தியா போன்ற வல்லரசு நாடுகளின் பிடிக்குள் சிக்குண்டு நிலைகுலைந்து போயுள்ளது. இந்த சிக்கல் தானாக திடீரென ஏற்பட்டதொன்றல்ல. இலங்கையை மாறி மாறி ஆட்சி செய்து வந்த / வரும் ஆட்சியாளர்களின் கொள்கைகளும், சர்வதேச ஒப்பந்தங்களினால் வரும் முதலீடுகளும், வெளிநாட்டுக் கொள்கைகளும், பொருளாதார-அரசியல் நெருக்கடி, யுத்தம் என்பவையெல்லாம் இணைந்து தான் இலங்கையை இன்று யார் வைத்திருக்கிறார்கள் என்கிற கேள்வியை மக்கள் எழுப்பும் நிலைக்கு வந்துள்ளது எனலாம்.

இன்று ஆசியாவில் அபிவிருத்தியடைந்துவரும், ஏராளமான வளங்களைக் கொண்டிருக்கும் நாடாகத் திகழும் இலங்கை, உலக நாடுகளின் பார்வையில் சிக்கி சின்னாபின்னமாகி வருகின்றது. சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனைகளால் கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக இலங்கையில் நீடித்த அஹிம்சை மற்றும் ஆயுத ரீதியானப் போராட்டங்கள் இலங்கையை அரசியல், பொருளாதார ரீதியாக வெகுவாகப் பாதித்தது. ஜனநாயப் பண்புகள் சிதைக்கப்பட்டு இன்று சர்வதேச ரீதியாக கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது. இந்நாட்டின் அரசியல் சூழ்நிலைகளால் பல செல்வந்தர்களை, பெரும் முதலீட்டாளர்களை, புத்திஜீவிகளை இவ் நாடு இழந்துள்ளதுடன், புலம்பெயரவும் வைத்துள்ளது எனலாம். உள்நாட்டுப் பிரச்சினைகள் சிறுபான்மைச் சமூகங்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருந்தாலும், உலக நாடுகளின் போக்குக்கேற்ப அரசியல், சுகாதாரம், கல்வி, விஞ்ஞானம், கைத்தொழிற்துறை, சுற்றுலாத்துறை, உற்பத்தி, ஏற்றுமதி என பல துறைகளில் தன்னைக் கட்டமைத்துக் கொள்ள வேண்டிய தேவை இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. மனிதன் தோன்றிய காலம் தொட்டு இப்பூமி பற்பல மாற்றங்களால் தன்னைப் புதுப்பித்தும், அழிவுப்பாதை நோக்கி தன்னை நகர்த்தியும் வருகிறது. விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி மனிதனுக்கு இன்று அத்தியாவசியமாகவிருந்தாலும் மறுபக்கத்தில் ஆபத்தினையும் இப்பூமியில் விதைக்கின்றது.

இந்தச் சூழலுக்கு மத்தியல் தான் இலங்கையினது இருப்பு என்பது பல்வேறு நாடுகளின் தேவையாக உள்ளது. இயற்கையான துறைமுகங்களும் இலங்கையின் வளங்களும் ஏனைய நாடுகளுக்குத் தேவைப்படுகின்றது. நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டிருப்பதால் இலங்கை சர்வதேச ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக மாற்றம் பெற்றிருக்கின்றது. இயற்கை எம் நாட்டிற்குத் தந்த கொடைகள் அதிகம். அவற்றை இலங்கையர்கள் பயன்படுத்தாமல் இன்று வல்லரசு நாடுகள் சொந்தம் கொண்டாடும் அளவிற்கு நிலைமைகள் மிக மோசமாகியுள்ளது. பொருளாதார ரீதியாக சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு கரம் கொடுக்க பல நாடுகள் முண்டியடித்துக்கொண்டிருக்க என்ன காரணம் என்கிற கேள்விக்குப் பின்னாலுள்ள பதில்கள் ஏராளம். அன்றே இலங்கையின் பாதுகாப்பான இயற்கைத் துறைமுகமான திருகோணமலையை குறிவைத்து அமெரிக்கா மற்றும் இந்தியா. ஒரு நாட்டினது அபிவிருத்திக்கு அதுவும் அபிவிருத்தியடைந்துவரும் ஒரு நாட்டுக்கு சர்வதேச ரீதியான ஒப்பந்தங்களும் கடன் உதவிகளும் வெளிநாட்டு முதலீடுகளும் அவசியமானவை தான். எனினும் இதன் ஊடாக எமது நாட்டிற்குள்ளான அந்நிய நாடுகளின் ஆதிக்கம் என்பது இலங்கையின் தனித்துவமான செயற்பாடுகளுக்கும் தேசிய பாதுபாதுகாப்பிற்கும் நாட்டிற்குள் மக்களிடையே குழப்பங்களையும் ஏற்படுத்தும் ஒன்றாக இன்று மாறியுள்ளது.

அந்நிய நாடுகளுக்கு நாட்டினது சொத்துக்களை விற்பது அல்லது குத்தகை அடிப்படையில் கையளிப்பது குறித்து மக்கள் ஜனநாயக ரீதியாக கேள்வி எழுப்பி வருகின்றனர். போராட்டங்களைக் கூட செய்யத் துணிந்துள்ளனர். அந்த அளவிற்கு அரச கொள்கையானது தலைகீழாக மாற்றம் பெற்றுள்ளது. அரசியல் ரீதியாக தம்மைப் பலப்படுத்துவதற்கு அந்நிய நாடுகளில் இருந்து பெறப்படும் பணத்தை தேவையற்ற, எந்தவித வருமானமும் இல்லாத வேலைத்திட்டங்கள் என்கிற போர்வையில் நிதி செலவுசெய்யப்பட்டுள்ளது. இதனை இன்றைய அரசு என்பது மாத்திரமல்ல கடந்த கால அரசுகளும் கூட செய்து வந்தன. அதனை மறந்து கடந்த காலத்தில் ஆட்சியிலிருந்த தரப்பினர் இன்றைய அரசினை மாறி மாறி குற்றஞ்சாட்டி தமது அரசியலை முன்னெடுத்து வருகின்றனர். இவர்களின் செயற்பாடுகளால் பாதிக்கப்படுவது மக்கள் என்பதை உணர்ந்தும் தமது சுயலாபத்திற்காக நாடு இன்று மேற்கூறிய நாடுகளின் பிடியில் இருந்து விடுபட முடியாமல் மீண்டும் மீண்டும் அவர்களிடத்திலே கையேந்தும் நிலைக்கு வந்துள்ளது.

பெற்ற கடன்களின் மூலமாக நிலையான அபிவிருத்தி தொடர்பில் பாரிய வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தால் அது வரவேற்கத்தக்கது. அல்லது உற்பத்தித் துறையில் பாரிய புரட்சி ஏற்படுத்தப்பட்டிருந்தால் அது நியாயமானது. கடன்களை மீளச் செலுத்துவதும் இலகுவாக மாறியிருக்கும். ஒரு காலத்தில் நியாயமாக தமிழினத்திற்கு வழங்கப்படவேண்டிய விடயங்களைச் செய்யாது தனது மேலாதிக்கப் போக்கினால் இந்நாட்டில் அடக்குமுறைகளைப் பிரயோகித்து தமிழினத்தை ஆயுத வழி பயணிக்கச் செய்து ஒட்டுமொத்தமாக இனப்படுகொலையைச் செய்ய பல நாடுகளிடம் கடன்களாக ஆயுதங்களையும் இதரப் பொருட்களையும் பெற்றது இலங்கை. இதனால் சுற்றுலாத்துறை கூட மிக மோசமாகப் பாதித்தது. பேசித்தீர்க்க வேண்டிய பல விடயங்கள் பேசித்தீர்க்கப்படாமல் தமது அரசியல் தேவைக்காக தெற்கில் தாம் பலசாலிகள் அரசர்கள் எனக் காட்டிக்கொள்வதற்காக நிதி தேவையற்ற முறையில் பயன்படுத்தப்பட்டது. இன்று வெளிநாட்டுக் கடன்களை நம்பியே நாட்டினை கொண்டு நடத்த வேண்டிய துர்ப்பாக்கிய சூழலால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாகவே இன்றைய விலை அதிகரிப்பும் பொருட்களின் தட்டுப்பாடும் அதிகரித்துக் காணப்படுகின்றது. உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும் கோவிட் பரவலாலும், உக்ரைன் - ரஸ்யா போராட்டத்தாலும் அல்லல்படுகின்றபோதிலும் இன்றைய இலங்கையின் நிலைமை மிக மோசமாகியுள்ளது என்றே கூறப்படுகின்றது.

என்றுமில்லாதவாறு கடந்த 2005ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் சீனாவினது ஆதிக்கம் அதிகரித்துள்ளது. அப்போது ஜனாதிபதியாக பதவியேற்ற மஹிந்த ராஜபக்ச அவர்கள் சீனாவினைச் சார்ந்து தனது அரசை வழிநடத்தினார். அதன் தொடர்ச்சியாக இந்நாடு பாரிய சீன முதலீடுகளின் மூலமாக என்றுமில்லாதவாறு மேம்பாலங்கள், வீதிகள், கட்டடங்கள், விமான நிலையம், துறைமுகம் என அமைக்கப்பட்டது. போர்ட் சிற்றி என்கிற துறைமுக நகரம் அமைக்கப்பட்டுள்ளது. அதனை விட கொழும்பில் தாமரைக் கோபுரம் சீனாவின் முதலீட்டால் அமைக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் மீளவும் செலுத்தப்படவேண்டிய கடன்கள். இவைகளுக்கு பதிலாக நிலம் குத்தகைக்கு சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. எமது நாட்டின் வளத்தை பிறிதொரு நாட்டிற்கு குத்தகைக்கு கொடுத்தமை மக்களை சினங்கொள்ளச் செய்திருக்கிறது. இன்றைய அரசியலின் பேசுபொருளாக இலங்கையின் சீனா தான் இருக்கிறது. கடன்களின் மூலம் மக்களின் முதுகில் பாரம் அதிகரித்துள்ளது. வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள இந்நாட்டில் கடன்களைப் பெற்றுக்கொண்டேயிருந்தால் நாட்டின் நிலைமை என்ன?.

உற்பத்திகளுக்கு பாரிய நிதிகளைச் செலவழிக்காமல் முதலீடு செய்யாமல் கட்டங்களைக் கட்டி அழகு பார்ப்பதில் என்ன இருக்கிறது. மாறாக பலாலி விமான நிலையத்தினை அபிவிருத்தி செய்திருக்கலாம். அதன் மூலமாக வடக்கு அபிவிருத்தியடைந்திருக்கும். வருமானம் வரக்கூடிய திட்டம். இந்தியாவுடன் உதவியுடன் பலாலியை அபிவிருத்தி செய்கிறோம் என்றது அரசு. ஆனால் தற்போது அங்கு என்ன நடக்கிறது என்பது தெரியவில்லை. திடீரென ஒரு விமானம் வந்திறங்குவதாக செய்திகள் வெளிவருகின்றன. அவ்வளவுதான். சீனா இன்று இலங்கையை சிறைபிடித்துள்ளதாகவே நோக்கர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் 500 மில்லியன் டொலர் முதலீட்டினை அதானி நிறுவனம் செய்யவுள்ளது. மன்னார் மற்றும் பூநகரி ஆகிய இடங்களில் எரிசக்தி திட்டங்களுக்காக ஒப்பந்தமும் செய்யப்பட்டுள்ளது. சராசரியாக 500 மெகாவோட் உற்பத்தித் திறனை கொண்டதாக இத் திட்டங்கள் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள அதேவேளை, கொழும்பு துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனைய அபிவிருத்தி திட்டங்களுக்கு அதானி நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது. இதன் மூலம் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தின் 51 வீத பங்குகள் இந்நிறுவனத்திற்குச் செல்கிறது. திருகோணமலையின் எண்ணெய் குதங்கள் பறிபோயுள்ளது. யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தை அமெரிக்காவிற்கு விற்பனை செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து துறைமுகங்கள் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களும் வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்ட சம்பவம் உங்களுக்கு நினைவில் இருக்கும். இன்று வேறு வழியின்றி சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறுவதற்கும் தொழில்நுட்ப ரீதியிலான உதவிகளைப் பெறுவதற்கும் இலங்கை முனைந்து வருகிறது. எனினும் அவர்கள் விதிக்கும் கடுமையான நிபந்தனைகள் இலங்கையினால் ஏற்றுக்கொள்ளப்படுமா? என்பது தொடர்பில் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். தற்போது இந்நிறுவனத்தின் கடன் இலங்கைக்கு தேவைப்படுவதாகவும் இல்லையேல் இலங்கை இன்று இருக்கும் நெருக்கடியினையும் கடந்து இலங்கையின் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடையவும் மீள்வதற்கு இன்னும் 20-30 ஆண்டுகளுக்கு மேல் தேவைப்படலாம் என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

உக்ரைன் நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்த காலப்பகுதியில் ஒருமுறை சர்வதேச நாணய நிதியத்தின கடன்களைப் பெற அணுகிய போது அதனை அந்நாட்டின் எதிர்க்கட்சி உட்பட்ட பலர் கடுமையாக எதிர்த்தனர். உள்ளூரில் எதிர்பபுக்கள் கிளம்பியது. தமது நாட்டின் கைத்தொழில் இதனால் பறிபோகும் அபாயம் இருப்பதாக அப்போது அங்கு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

சர்வதேச நாடுகளின் வழமைக்கு மாறான உதவிகளும் அதன் நிமித்தமாக வளங்களைக் கையகப்படுத்துவதும் நாட்டிற்குப் பாதகத்தினை உண்டுபண்ணும். நாட்டிற்குள் குழப்பங்களை ஏற்படுத்தும். இந்த நாட்டினது வளங்கள் சர்வதேச நாடுகளால் சூறையாடப்படுவதை மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதை நினைவிற்கொண்டு ஆட்சியாளர்கள் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டும். இல்லையேல் இந்நாடு மேற்கூறிய நாடுகளின் பிடியிலிருந்து தப்ப முடியாமல் எதிர்காலத்தில் வெளிநாட்டு ஊடுறுவல்கள் அதிகரித்து, இலங்கை மேற்கூறிய நாடுகளின் சொத்தாக மாற்றம் பெற்றுவிடும்.

**சசிகரன்**

# ஆட்சிமாற்றம் தமிழ்த் தரப்பிற்கு சாதகமாக அமையுமா?



இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் பிரித்தானியரின் ஆட்சியில் இந்நாடு நிர்வகிக்கப்பட்டபோதிலும் 1972 ஆம் ஆண்டில் வில்லியம் கோபல்லாவ ஜனாதிபதியாக பதவி வகித்ததுடன் தொடர்ச்சியாக நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதிகளாக ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ரணசிங்க பிரேமதாச, டிங்கிரி பண்டா விஜேதுங்க, சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, தற்போதைய ஆட்சியாளர் கோட்டாபய ராஜபக்ஷ என ஆட்சியாளர்கள் மாறி மாறி இலங்கையை ஆட்சிசெய்கின்றபோதிலும், அன்றிலிருந்து இன்றுவரை தமிழினம் எதிர் நோக்கிய பிரச்சினைகளுக்கானத் தீர்வுகளை இதுவரை எந்தவொரு அரசாங்கமும் வழங்கவில்லை. அடக்குமுறைகளுக்கு எதிராக தமிழ் இளைஞர் யுவதிகள் தொடர்ந்தும் இந்நாட்டில் போராடியே வருகின்றனர். இதற்குள் போராட்ட வடிவங்கள் மாற்றம் பெற்றது. இனப்படுகொலை, மனித உரிமை மீறல்கள், திட்டமிட்ட சிங்கள அரசின் தமிழ் மக்கள் மீதான அடாவடித்தனங்கள், காணி அபகரிப்பு, பௌத்த விகாரைகளை தமிழர் பிரதேசங்களில் அமைத்தல், மகாவலி அபிவிருத்தி என்ற போர்வையில் வடகிழக்கில் சிங்களக் குடியேற்றம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கானத் தீர்வு, வருடக்கணக்கில் சிறைகளில் வாடும் அப்பாவித் தமிழ் இளைஞர்கள், கொடூரமான பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்காமை போன்ற பல பிரச்சினைகளுக்கானத் தீர்வினை ஆட்சியிலிருந்த அரசுகள் வழங்க மறுத்தே வந்துள்ளன. இவ்விடயத்தில் அரச நிகழ்ச்சிநிரல் இன்றுவரை மாற்றம் பெறவில்லை.

எனினும், தமிழ் மக்கள் இந்த மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசுகளிடம் தமக்கான பிரச்சினைகளுக்குரியத் தீர்வினை எதிர்பார்க்க முடியாது என்பது நிதர்சனம். ஏனெனில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் யாரால் ஏற்படுத்தப்பட்டதோ அவர்களிடம் சென்று நாம் நியாயத்தை கேட்கவும் எதிர்பார்க்கவும் முடியாது. அதனால் தான் தமிழினம் சர்வதேச நீதிமன்றத்தின் விசாரணையை வலியுறுத்தி வருகிறது. குற்றமிழைத்தவர்கள் என உள்ளூரிலும் சர்வதேச ரீதியாகவும் அடையாளப்படுத்தப்பட்டவர்களிடம் நீதியை எதிர்பார்க்கவியலாது என்பதை தமிழினம் நன்கு உணர்ந்து வைத்துள்ளது.

இலங்கையின் இந்த பௌத்த மேலாதிக்க சிந்தனையின் வெளிப்பாடான ஆட்சியாளர்களிடம் தமிழினம், தமது ஏகபிரதிநிதிகள் என அடையாளப்படுத்தப்படும் தமிழ்க் கட்சிகளின் வாய்ப்பேச்சை நம்பி கடந்த காலத் தேர்தல்களில் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் சிங்கள வேட்பாளரை ஆதரித்தது. தமிழ்க் கட்சிகளை நம்பி வாக்குகளை அள்ளி வழங்கியது. தமக்கானத் தீர்வுகள் கிடைக்கும் என நம்பியது. போலியான வாக்குறுதிகள் தேர்தல் காலங்களின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குபவரிடம் வெளிப்படும். இதனை எமது தமிழ்க் கட்சிகள் வேதவாக்காக எடுத்துக்கொண்டு, எந்தவித நிபந்தனைகளும் இல்லாமல் ஒட்டுமொத்த தமிழினத்தின் வாக்குகளை அவர்களின் காலடியில் போடவைத்தது என்பது தான் உண்மை. தமிழினம் தமிழரை நம்பியே தொடர்ச்சியாக ஏமாற்றத்தைக் கண்டு வருகின்றது. இந்த நிலையிலும் கடந்த காலத்தை விட தற்போது மாற்றம் ஏற்பட்டு வருவதைக் காணக்கிறோம். கடந்த கால பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் தீர்மானம் பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது உங்களுக்கு நினைவிருக்கும். மக்கள் விழிப்படையத் தொடங்கியுள்ளனர். தமிழ்த் தரப்பு இனிவரும் காலத்தில் கூறவிருக்கும் ஆட்சிமாற்றத்திற்கான சிங்களவர் ஒருவருக்கான ஆதரவினை தமிழ் மக்கள் அவ்வளவு எளிதில் வழங்குவார்களா என்பது கேள்விக்குறியே!

கடந்த மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்ரமசிங்க தலைமையில், மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சிக்கு முடிவுகட்டும் நோக்குடன் உருவாகிய நல்லாட்சி என்கிற அணிக்கு, வடகிழக்கில் வாழும் தமிழ் மக்கள் மாத்திரமல்ல தெற்கிலுள்ளவர்களின் ஆதரவுடன், தமிழ் மக்களின் பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆணையை ஏற்று தமிழ் மக்கள் வாக்களித்தார்கள். இதன் காரணமாக இலங்கையின் ஆட்சிமாற்றத்திற்கு காரணமானவர்களாக தமிழ் மக்கள் அமைந்தார்கள். ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் ஆட்சியிலிருந்த மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அணிக்கும் அவரது குடும்ப ஆட்சிக்கும் தீர்வுகளைக் கோரி ஏமாற்றமடைந்திருந்த நிலையில், பல கடத்தல் சம்பவங்கள், விசாரணைகள் என உச்சம் தொட்டிருந்த நெருக்கடியான சூழலில் தமிழ் மக்கள் ஒரு ஆட்சிமாற்றத்தை எதிர்பார்த்தார்கள் என்பது உண்மை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நல்லாட்சி அரசிற்கு பலமான ஆதரவினை வழங்கியது அப்போது.


ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அணியினர் தமிழ் மக்கள் எதிர்பார்த்ததை நிறைவேற்றத் தவறியிருந்தார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழ் மக்களின் நம்பிக்கைக்கு துரோகம் விளைவிக்கப்பட்டது. இரா. சம்பந்தன் அவர்களுக்கு பாராளுமன்றில் எதிர்க்கட்சி ஆசனம் மாத்திரமே சாதனையான விடயமாக அமைந்தது. முன்னரை விட நல்லாட்சி காலத்தின் போது காணிகள் விடுவிப்பில் முன்னேற்றம் காணப்பட்டபோதும் முழுமை பெறவில்லை. இழுத்தடிப்பும் குழப்பங்களுடன் நல்லாட்சி முடிவுக்கு வந்தது. ஆட்சி கவிழ்கின்ற நிலையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியது நல்லாட்சிக்கு என்பது மற்றொரு விடயம். இந்நிலையில் தான் இலங்கையில் தற்போது கொவிட் வைரசின் பின்னரான பொருளாதார நெருக்கடியும், நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் ரீதியான உட்கட்சிப் பிரச்சினைகளும், ரஷ்யா - உக்ரைன் யுத்தத்தின் பின்னரான கச்சா எண்ணெயின் விலையேற்றமும், இதனையொட்டிய இலங்கையில் ஏற்பட்டுள்ள திடீர் விலையேற்றங்களும், இலங்கையில் டொலருக்கான தட்டுப்பாடும் நாட்டு மக்களை நிர்க்கதிக்குள்ளாக்கியுள்ளது. நாட்டின் ஜனாதிபதியாகவிருக்கின்ற கோட்டாபய ராஜபக்சவை நாட்டைக்கொண்டு நடத்த இயலாதுவிட்டால் ஜனாதிபதிப் பதவியை விட்டு விலகுமாறும், ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை உடனடியாக வைக்குமாறும் வலியுறுத்தி சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவான அணியினர் மக்களையும் பெருமளவில் திரட்டி கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இந்த அரசின் செயற்பாடுகளைக் கண்டித்து இவர்களுக்கு முன்னர் ஜேவிபி அணியினர் பாரியளவில் மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டங்களைச் செய்திருந்தனர். ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்ட சஜித் அணியினர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அவர்களை வெளியில் வருமாறு அழைப்பும் விடுத்தனர். இவ்வாறான ஆர்ப்பாட்டங்களைப் பார்க்கிறபோது இன்று தென்னிலங்கை மக்கள் ஆட்சிமாற்றம் ஒன்றைக் கட்டாயம் கொண்டு வந்தேயாக வேண்டும் என்ற நோக்கில் ஈடுபடுவது பகிரங்கமாகத் தெரிகிறது. இன்றைய அரசை பதவியில் அமர்த்தியவர்களும் தென்னிலங்கை மக்கள் தான். ஆட்சிமாற்றத்திற்கான அறைகூவலை பொதுவெளியில் பகிரங்கமாகக் கூறிவரும் சஜித் தலைமையிலான அணியினர், முன்னர் மைத்திரி - ரணில் தலைமையிலான ஆட்சிக்கு முழு அளவில் பூரணமாக ஒத்துழைப்பு வழங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் பகிரங்கமாக சஜித் அணிக்கு ஆதரவு ஏதும் தெரிவிப்பதாக அறிவிக்கவில்லை. தற்போது ரணில் - சஜித் தனித்தனியாக பிளவுபட்டு அரசியலில் ஈடுபட்டு வரும் சூழலில், இழுபறிக்கு மத்தியில் எதிர்வரும் 25ஆம் திகதி ஜனாதிபதிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அணியால் அல்லது இந்த அரசால் எதுவித நன்மைகளும் கிடைக்கவே கிடைக்காது. இந்த அரசு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய நீதியை ஒருபோதும் வழங்காது எனக் கூறி சர்வதேச விசாரணையை வலியுறுத்திவரும் சூழலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியை சந்தித்து என்ன பேச்சுவார்த்தை நடத்தப்போகிறார்கள் என்பது தெரியவில்லை. இவ்வளவு காலம் தீர்வுகளை வழங்காத ஜனாதிபதி கோட்டாபயவும் கடந்த அரசுகளும் தற்போது இந்தப் பேச்சுவார்த்தையின் மூலமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அல்லது தமிழினத்திற்கு எதனை வழங்கப்போகிறார் என்பதை பொறுத்திருந்து பார்க்கவேண்டிய விடயமல்ல என்பது உறுதி.

தென்னிலங்கை முழுவதும் இந்த அரசிற்கு எதிரான அலை வீசிவரும் சூழலில், ஏற்கனவே மைத்திரி - ரணில் தரப்பில் அங்கம் வகித்தவர்களாகவிருந்த சஜித் அணியினர், எதிர்வரும் காலங்களில் தமிழ் மக்களின் ஆதரவினை பெறுவதன் ஊடாக, தமிழ் மக்கள் கோரும் விடயங்களை இனியாவது உள்வாங்கி, உரிய தீர்வுகளை வழங்குவார்களா?, சஜித் பிரேமதாச அவர்கள் தமிழ் மக்களுக்கான பிரச்சினைகள் குறித்தோ அதற்கான தீர்வுகள் குறித்தோ இதுவரை பொது வெளியில் அல்லது மறைமுகமாவோ ஒரு தீர்க்கமான முடிவுகளை அல்லது கருத்துக்களைக் கூறாத ஒருவர். அவரால் கூறவும் முடியாது. தமிழ்ப் பிரதிநிதிகளுடன் உரிய முறையில் கலந்துரையாடாத நிலையில், ஆட்சி மாற்றத்தின் மூலமாக இவர் ஜனாதிபதியாக பதவியேற்றால் தமிழ் மக்களுக்கு சாதகமான தீர்ப்புகள் கிடைக்குமா என்பது கேள்விக்குறிதான். ஏனெனில் தமிழினம் பல வரலாற்றுச் சம்பவங்களைப் பார்த்தவர்கள். கற்றுக்கொண்ட பாடங்கள் பல இருக்கின்றன எம் அரசியலுக்குள். பல சர்வதேச மற்றும் உள்ளூர் பேச்சுவார்த்தைகளின் மூலம் தோல்வி கண்டவர்கள் ஏமாற்றப்பட்டவர்கள். வாக்குறுதிகளும் போடப்பட்ட ஒப்பந்தங்களும் கூட காற்றில் பறக்கவிடப்பட்டு கிழித்தெறியப்பட்டிருக்கின்றன. இச்சூழலில் தென்னிலங்கை மக்கள் விரும்புகின்ற ஆட்சி மாற்றத்தால், தமிழ் மக்களையும் மீண்டும் ஆதரவுக்காக உள்வாங்குவதன் மூலம் தீர்வுகள் கிடைக்கும் என யாராவது கூறினால், அவர் தொடர்பில் தமிழ் மக்கள் என்ன முடிவெடுப்பார்கள் என்பதை பின்னர் சிந்திப்போம். **இந்த நாடு பௌத்த நாடு, பெரும்பான்மையாக சிங்கள மக்கள் வாழ்கின்றார்கள், நாட்டின் பூர்வீகக் குடிகள், இவர்கள் தான் நாட்டை ஆளவேண்டும், ஏனைய மக்கள் இந்த நாட்டில் வாழ்ந்தாலும் இலங்கை முழுவதும் சிங்கள மக்களும் விகாரைகளும் தான் பார்க்கும் இடமெல்லாம் தெரியவேண்டும் என்ற பௌத்த மேலாதிக்க சிந்தனைகள் இந்நாட்டில் மேலோங்கியுள்ளது. வரலாறுகள் திரிபுபடுத்தப்பட்டுள்ளது. தமிழினம் தனது தாயகமாக அடையாளப்படுத்தும் வடகிழக்கு எங்கிலும் அகழ்வாராய்ச்சிகள் என்கிற போர்வையில் நிலங்கள் இன்றும் பறிபோகின்றன.** இத்தகைய ஓர் சூழலில் சிறுபான்மை இன மக்களின் இருப்புக்களுக்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய அல்லது அவர்களை நிம்மதியாக வாழவிடாமல் செய்கின்ற பல சம்பவங்கள் இந்நாட்டில் ஏற்கனவே நடந்துள்ளது இன்றும் நடைபெறுகின்றது.

இலங்கையை எந்த சிங்களவர் ஆட்சிசெய்தாலும் ஏன் தமிழர் அல்லது முஸ்லீம் ஒருவர் ஆட்சி செய்தாலும் அவர் இலங்கையில் இருக்கும் மூன்று பீடங்களின் ஆணைபடியே செயற்படுவார். அவர்களின் பேச்சை மீறி யாரும் இந்நாட்டில் தன்னிச்சையாக செயற்பட முடியாது. அதேபோல் தான் சிங்கள மக்களும். தமக்கான ஒரு நிகழ்ச்சி நிரலை இலங்கையின் முன்னாள் பிரதமர் பதவியேற்ற காலம் முதல் ஜேஆரின் காலத்தில் நன்கு அந்த நிகழ்ச்சி நிரல் செப்பனிடப்பட்டு, இன்றுவரை இலங்கையை ஆட்சி செய்யும் ஆட்சியாளர் வரை கடைப்பிடித்து வருகின்றனர் என்பது உண்மை.

இந்த சூழலில் தான் ஒவ்வொரு ஆட்சியாளரும் அரசும், தமிழ் மக்களை, சிறுபான்மை சமூகங்களை அந்தந்த சூழலுக்கு ஏற்ப காலத்துக்குக் காலம் தமக்குச் சார்பாக பயன்படுத்தி வருகின்றனரே தவிர, அவர்களின் பிரச்சினைகள் குறித்தோ அல்லது அதிகாரப் பரவலாக்கலின் அவசியத்தை உணர்ந்தோ சிந்திக்கப்போவதில்லை. தமிழினம் தன்னை விட மேலே ஒருபடி வளர்ந்துவிடக்கூடாது என்கிற சிந்தனை மேலோங்கியுள்ளது. வடகிழக்கின் அபிவிருத்திகள் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்கிற நோக்கம் இன்றும் உள்ளது. ஒரு காலத்தில் தேசியக்கொடி தமிழ் மக்களை பிரதிபலிப்பதைக் கூட விரும்பாதவர்கள் இந்நாட்டை ஆட்சிசெய்தனர் என்பதை தமிழினம் இன்றும் நினைவில் வைத்திருக்கிறது. எமது அயர்ச்சியற்ற உச்சக்கட்டத் தொடர் போராட்டங்களினால் தான் நாம் இன்று இந்நாட்டில் தக்கவைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதை நினைவிற்கொள்வோம். இதன் தொடர்ச்சியாகவே மழை, வெயில் பாராது போராடியும் வருகின்றோம் தலைமுறை தலைமுறையாக. எனவே இன்னும் காலங்கள் அதிகம் தேவைப்பட்டாலும், தொடர் போராட்டங்களின் அழுத்தங்களினாலும், கல்வி கலாச்சார பொருளாதார வளர்ச்சியினாலும், ஒற்றுமையான கட்டுக்கோப்பான அரசியல் பலத்தாலும் தான் தமிழினம் இந்நாட்டில் தலைநிமிர்ந்து உரிமைகளைப் பெற்று வாழ முடியுமே தவிர, ஆட்சி மாற்றங்கள் எமக்கு சாதகமாக ஒரு போதும் அமையாது என்பதுவே உண்மை.

**சுழியோடி**



# அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றமும், அரசின் அசமந்தப் போக்கும் – ஆபத்தில் இலங்கை

கோட்டாபய ராஜபக்ஸ அவர்கள் ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னரான இலங்கையின் பொருளாதார நிலை என்பது முன்னர் இருந்ததைவிட அல்லது முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு பாரிய வீழ்ச்சியினைக் கண்டு வருகின்றது. தொடர்ந்தும் இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சி காணப்படாது. உள்நாட்டில் பாரிய பிரச்சினைகள் தலையெடுத்துள்ளது. இப் பொருளாதார வீழ்ச்சியானது உலகமெங்கிலும் தீவிரமாகப் பரவியுள்ள கொவிட் என்கிற வைரசின் காரணமாக முடங்கியது என அரசால் கூறப்பட்டு வந்தது. இலங்கையிலும் இவ் வைரசானது பாரிய தாக்கங்களை ஏற்படுத்தி வருகிறது. இதனை மறுப்பதற்கில்லை. உள்நாட்டில் உற்பத்திகளில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளில் தடை ஏற்பட்டது. ஏற்கனவே இலங்கையானது ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜிஎஸ்பி பிளஸ் சலுகையினை இழந்துள்ளமை அனைவருக்கும் நினைவில் இருக்கும். இச்சலுகையினை மீளவும் இலங்கை பெறுவது குறித்து பரலாக உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் இன்றளவும் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கிறது.

திடீரென சுற்றுலாத்துறையில் வீழ்ச்சி ஏற்பட்டது. வெளிநாடுகளில் பணிபுரிவோர் தாயகம் நோக்கித் திரும்ப ஆரம்பித்தனர். இதனால் இலங்கையின் அந்நிய செலாவணிக்கு பாதிப்பு ஏற்பட்டது. விமானப் போக்குவரத்துக்கள் மட்டுப்படுத்தப்பட்டதனால் வெளிநாட்டுப் பயணிகள் இலங்கைக்குள் அனுமதிக்கப்படவில்லை. இலங்கையரசும் உள்நாட்டில் கொவிட் வைரசினைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் கடும் விமர்சனத்திற்கும் உள்ளாகியது அரசின் நடவடிக்கைகள். கொவிட் ஒழிப்பு செயலணியின் செயற்பாடுகள் குறித்து பாராளுமன்றில் காரசாரமான விவாதம் கூட நடைபெற்றது. தேவையான நேரத்தில் நாட்டில் முடக்கத்தினை ஏற்படுத்தவில்லை. பொதுப் போக்குவரத்துக்களில் ஏற்பட்ட அசமந்தப்போக்குகள், மக்களுக்கான நிவாரணங்கள் குறித்தெல்லாம் புதிதாக பதவியேற்றிருந்த கோட்டாபய ராஜபக்ஸ தலைமையிலான அரசுக்கு கடும்நெருக்கடிகளை ஏற்படுத்தியது. இதற்கிடையில் இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து கொவிட் தடுப்பூசிகள் பெறப்பட்டு மக்களுக்கு வழங்கும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டது. எனினும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான விடயங்கள் குறித்து அரசு போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்கிற குற்றச்சாட்டு பரவலாக முன்வைக்கப்பட்டது. பொருளாதார வளர்ச்சி தொடர்பில் திட்டமிட்ட செயற்பாடுகள் இன்மையால் இன்று முன்னர் இருந்ததை விட நிலைமை மிக மோசமாகியுள்ளது. இதற்கு கடந்த கால இலங்கையின் ஆட்சியாளர்களும் ஒரு காரணம். இந்த நிலையில் தான் மெதுமெதுவாக கொவிட் வைரசினைக் காரணங்காட்டி அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் படிப்படியாக நாட்டில் உயர்த்தப்பட்டது. எரிபொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டது. பொருட்களுக்கானத் தட்டுப்பாடும் தொடர்ந்து நீடித்து வந்தது. இந்நிலையில் திடீரென சமையல் எரிவாயு வெடிக்கும் நிலை ஏற்பட்டது. இதனைச் சரிசெய்யவே அரசுக்கு இன்னும் முடியவில்லை. தற்போதும் ஆங்காங்கு இப்பிரச்சினைகள் பதிவாகி வருகின்றன. தொடர்ந்தும் கொவிட் வைரஸ் பரவல், விலையேற்றம், பொருட்கள் தட்டுப்பாடு என இலங்கை பயணித்துவந்த போதிலும், கோட்டாபய ராஜபக்ஸ தலைமையிலான அரசுக்குள் பாரிய குழப்பங்கள் உருவெடுக்க ஆரம்பித்தன. மறுபக்கத்தில் டொலர் கையிருப்பு குறைவடைந்துகொண்டு சென்றது. அரச கொள்கைகளில் செயற்பாடுகளில் பிரச்சினைகள் உருவாக ஆரம்பித்தது. செய்வதறியாது அரசும் அதன் பங்காளிக் கட்சிகளும் இன்று தடுமாற ஆரம்பித்துள்ளன. இலங்கையின் பிரதான தொழிலாக இருக்கும் விவசாயத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நெற்பயிர்ச்செய்கையினைச் செய்யும் விவசாயிகள் அரசின் உர இறக்குமதிக்கானத் தடையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இயற்கை உரத்தினை இறக்குமதி செய்கின்றோம் என்கிற போர்வையில் நாட்டின் உற்பத்திக்கு இந்த அரசாங்கமே பாதிப்பினை ஏற்படுத்தியது. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைகள் உரம் இன்மையால் பெரும் பாதிப்பினை எதிர்நோக்கின. ஏற்கனவே கொவிட் வைரசின் தாக்கத்தினால் மக்களது அன்றாட வாழ்க்கை முறை பாதிப்படைந்திருந்த நிலையில் அரசின் திடீர் விவசாயக் கொள்கையானது நாட்டில் அரசுக்கெதிரான நடவடிக்கைகளுக்கு வழிவகுத்தது. உள்நாட்டில் நெல் உற்பத்திக்கு தடையினை ஏற்படுத்திய அரசாங்கம் வெளிநாடுகளில் இருந்து அரிசியினைக் கொள்வனவு செய்ய ஆரம்பித்துள்ளது. தற்போது நாட்டில் மக்களுக்குத் தேவையான அரசிக்கு பாதிப்பும் விலைகளும் உயர்த்தப்பட்டுள்ளது.

அரசுக்கும் அரச உயர் அதிகாரிகளுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட ஆரம்பமானது. இலங்கையின் மத்திய வங்கியின் ஆளுநர் பதவிக்காலம் முடிவடைய காலங்கள் இருந்த நிலையிலும் தனது பதவியினை இராஜிநாமா செய்தார். உடனடியாக அரசால் பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் அவர்கள் மத்திய வங்கயின் ஆளுநராகப் பதவியேற்றார். அரசுக்கும் அரச பங்காளிக் கட்சிகளுக்கும் இடையில் பிரச்சினைகள் உருவாகியுள்ளது. அரச அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் கூட சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது. ஆக அரசே ஒற்றுமையாக ஒருமித்துச் செயற்பட முடியாத நிலையில் இருப்பதை இன்று நாம் காண்கிறோம். ஜனாதிபதி கோட்டாபய அவர்கள் தனது நிறைவேற்று அதிகாரத்தை பல இடங்களில் பயன்படுத்தி வருகிறார். இது மக்களை மேலும் விசனத்திற்குள்ளாக்கியுள்ளது. இலங்கையின் இந்த இழுபறி செயற்பாடுகளுக்கு மத்தியில் தான் திடீரென ரஸ்யா மற்றும் உக்ரைன் நாடுகளுக்கிடையிலான போர் உருவாகியிருக்கிறது. இப்போரினால் இலங்கை போன்ற பல அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும் பெரும் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளன. கச்சா எண்ணெயில் ஏற்பட்ட விலை மாற்றம் இன்று இலங்கையைக் கடுமையாகத் தாக்கியுள்ளது. எரிபொருள் என்றுமில்லாதவாறு விலை அதிகரித்துள்ளது. நாட்டில் டொலருக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதை இலங்கை மத்திய வங்கியே வெளிப்படுத்தியுள்ளது. கப்பல்கள் அத்தியாவசியப் பொருட்களுடன் துறைமுகத்தில்நங்கூரமிடப்பட்டுள்ளபோதிலும் டொலர் பற்றாக்குறையால் பொருட்களைக் கொள்வனவு செய்வதில் தாமதமும் ஏற்பட்டுள்ளது. இதனால் வெளிநாடுகளிடமிருந்து டொலரைக் கடன் வாங்கும் அளவிற்கு இலங்கை சென்றுள்ளது. டொலரினை நாட்டிற்குள் கொண்டுவர, உள்நாட்டில் டொலர் ஒன்றிற்கான பணமும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் சமையல் எரிவாயுவினைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் பெரும் அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர். நீண்ட வரிசையில் வீதிகளில் காத்திருக்கின்றனர். நாட்டில் போதியளவான சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இல்லை என்பதே உண்மை. இதற்கு செலுத்துவதற்கு அரசிடம் டொலர் கையிருப்பில் இல்லை. நாளுக்கு நாள் டொலரின் விலை இலங்கையில் அதிகரித்து வருகின்றது. மருந்துப்பொருட்கள் பார்மசிகளில் இல்லை. பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தான் பார்மசிகளில் மருந்துப்பொருட்கள் கிடைக்கின்றன. குழந்தைகளுக்கான பால் மாவுக்கு கூட பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சிறியவர்கள் முதல் பெரியோர்கள் வரை பயன்படுத்தும் பால் மா வகைகளை இன்று கடைகளில் பெற முடியாத நிலைமை. இவற்றிற்கான விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. தட்டுப்பாடும் நிலவுகின்றது.

ஒரு நாட்டில் அத்தியாவசியப் பொருட்களுக்கான விலை அதிகரிப்பானது மக்களுக்கு பெரும் இன்னல்களை ஏற்படுத்துபவை. மக்கள் அரசாங்கத்தைக் கொண்டுவருவது இதற்கல்ல. கண்ணைமூடிக்கொண்டு விலைகளை ஏற்ற முடியாது. சர்வதேச சந்தைகளில் விலைகள் அதிகரிக்கிறது என்பதற்காக உள்நாட்டில் விலையினை அதிகரிப்பது நியாயமாகாது. இதற்காக மக்கள் அரசினைக் கொண்டுவருவதில்லை வாக்களிப்பதில்லை. மக்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதே அரசின் கடமை. நாட்டில் சமாதானம், மக்களது சுமுகமான வாழ்வு என்பது அவசியம். மக்களை துன்பத்தில் அமிழ்த்திவிட்டு அரச அதிகாரிகள் சொகுசு ரக கார்களில் பயணம் செய்வதையும் விலை கூடிய பொருட்களை வாங்கி உல்லாசமாக இருப்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அரிசிக்கு அடுத்தபடியாக மக்கள் பயன்படுத்தும் கோதுமை மாவிற்கான விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. மலையக மக்களுக்கு மானிய விலையில் உணவுக்கான கோதுமை மா வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டு முற்பணமாக அவர்களின் சம்பளத்தில் இருந்தே பிடிக்கப்பட்டுள்ளது. எனினும் அவர்களுக்குத் தேவையான மாவினை துரிதகதியில் வழங்க இவ்வரசாங்கத்தினால் முடியவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இவ்வரசினால் மக்களுக்கு பொய்யான வாக்குறுதிகள் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருவதாகவும், இயலவில்லை எனில் ஆட்சியினை இளைஞர்களின் கைகளில் ஒப்படைத்துவிட்டு வீடு செல்லுமாறு வீதிகளில் எரிபொருளுக்காகவும், சமையல் எரிவாயுவிற்காகவும் மணிக்கணக்கில் காத்திருக்கும் மக்கள் கூறுகின்றனர். நாட்டின் எதிர்க்கட்சி பாரிய ஆர்ப்பாட்டமொன்றைச் செய்து வருகிறது. பெண்கள் ஜனாதிபதியின் வீடுநோக்கி ஆர்ப்பாட்டமாகச் செல்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. மின்பட்டியலின் விலையும் அதிகரித்துள்ளது. தற்போது எதற்கெடுத்தாலும் உக்ரைன் - ரஸ்யப் போர் பற்றி அமைச்சர்கள் பேச ஆரம்பித்துள்ளனர். அதனால் தான் இலங்கையில் இவ்வாறு விலைகள் உயர்வடைந்துள்ளதாக கருத்துக்கூற ஆரம்பித்துள்ளனர்.

அரசின் பங்காளிக்கட்சிகளுக்குள் பிரச்சினைகள் முளைத்துள்ளன. இச் செயற்பாடானது தென்னிலங்கை அரசியலில் குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது. எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்கிற நிலை தான் இது. அரச தரப்பினரே அரசின் செயற்பாடுகள் குறித்து கருத்துத் தெரிவிக்கின்றனர். இவ்வரசு ஒரு கட்டுக்கோப்பாக இயங்கத் தவறியுள்ளது. இராணுவத்தினரின் தலையீடுகள் நாட்டு மக்களை அதிருப்தியடையவைத்துள்ளது. இராணுவத்தினரின் நியமனங்கள் குறித்து பாராளுமன்றில் சர்ச்சைகள் எழுந்துள்ளன. உரிய தீர்வுகளை வழங்காத ஜனாதிபதி பதவியில் இருக்கும் அரச அதிகாரிகள் தவறினைச் சுட்டிக்காட்டினால், கருத்துக்களை முன்வைத்தால் அவர்களை பதவி நீக்கம் செய்தல் என்பதைக் கையில் எடுத்துள்ளார். தனது சகோதரரான பசில் ராஜபக்ஸ அவர்களை அமெரிக்காவில் இருந்து வரவழைத்து அவரை நிதியமைச்சர் பதவியில் அமரவைத்தமை தொடர்பாக கடும் வாதப்பிரதிவாதங்கள் நாட்டில் எழ ஆரம்பித்துள்ளன. அவரின் வருகையின் பின்னர் தான் இலங்கையின் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சி கண்டிருப்பதாகவும், பொருட்கள் விலையேற்றம் அடைந்திருப்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இலங்கை இன்று சீனா மற்றும் இந்தியாவிடமிருந்து அத்தியாவசியப் பொருட்களை கையேந்தும் அளவிற்கு இலங்கையின் உள்நாட்டு உற்பத்தித் துறையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அரசின் மாற்றுத்திட்டங்கள் கொள்கைகள் எல்லாம் மறுசீரமைக்கப்பட்டு நாட்டுக்குப் பயன்படாமல் எல்லாவற்றுக்கும் வெளிநாடுகளை நம்பியிருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எரிபொருள் பற்றாக்குறையால் இலங்கையில் தொடர்ச்சியாக மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் மக்கள் இருட்டில் இருக்கவேண்டிய நிலை. பகலிலும் மின்வெட்டு அமுலாக்கப்பட்டு வருகின்றது. மக்கள் இன்று அரசின் செயற்பாடுகளுக்கு எதிராக வீதிகளில் இறங்கிப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். நாட்டின் உயர் அதிகாரிகள் எரிபொருளுக்காக வீதிகளில் நிற்பதில்லை, அத்தியாவசியப் பொருட்களுக்காக காத்திருப்பதில்லை, மின்சாரத் தடையினையும் எதிர்நோக்குவதில்லை. அவர்கள் நிம்மதியாக அனைத்து வசதிகளையும் பெற்று வீடுகளில் உறங்குகிறார்கள். ஆனால் அரசிற்கு வாக்களித்த மக்கள் இரவுகளில் உறங்க முடியாமல் அல்லல்படுகின்றனர். தமது பிள்ளைகளின் கல்வி தொடர்பில் பெரும் கேள்வி எழுந்துள்ளது. பாடசாலை மாணவர்களுக்கான பாடப் புத்தகங்களை அச்சிடுவதிலும் இன்று சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் பல பொருட்களுக்கான இறக்குமதித் தடையினை அரசு விதித்துள்ளது. மக்கள் தமது விருப்பத்திற்கேற்ப வாழ தடையினை விதித்துவிட்டு நாட்டின் உயர் தரப்பினர் அனைத்து வசதிகளையும் பெற்று மக்கள் பணத்தில் வாழ்கின்றனர். அரசு மக்களைக் கைவிட்டுள்ளது. வெளிநாட்டு முதலீடுகளைப் பெறுவதிலும், நாட்டின் சொத்துக்களை விற்பதிலும், ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டு கடன்களை தொடர்ந்து வாங்குவதிலும் அரசு குறியாகவிருக்கின்றது. கடந்த கால அரசுகளின் தொடர்ச்சியான செயற்பாட்டினையே தற்போதைய அரசும் மேற்கொள்கின்றது.

11ஆம் பக்கம் பார்க்க...

**நெற்றிபொறியன்**

# இலங்கை அரசு பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீள்வதற்கு தமிழருக்கு சம உரிமையை வழங்க வேண்டும் – இல்லையேல் ஆபத்து

## முன்னாள் வடமாகாண விவசாய அமைச்சர் – க.சிவனேசன் அவர்களுடனான நேர்காணல்

தற்பொழுது நாட்டில் நடந்துகொண்டிருக்கின்ற யுத்தம் மேற்கத்தைய நாடுகளா அல்லது ரஷ்யா இந்தியா என்ற கூட்டுக்குள் போகப்போகின்றார்களா? ஒழுங்கு ஒன்று மாறப்போகின்றதல்லவா?. உலக ஒழுங்கு மாறினால் அதை பொறுத்து தான் எதிர்காலத்தின் பொருளாதார நிலைமையை கணிக்கலாம். ஆனால் எங்களது நாட்டில் பொருளாதாரம் சீர்குலைந்ததே தவிர பொருளாதாரம் இல்லாமல் போகவில்லை. எங்களிடம் நிறைய மருந்துகள் இருக்கின்றது அதை சரியான முறையில் பயன்படுத்தும் அமைப்பு வரும்என்றால் அது சீர்அமைக்கமுடியும் எதிர்காலத்தில். தேவையான வளங்கள் இருக்கின்றது. பொருளாதாரம் சீர் குலைவதற்கு எங்களது நாடு இல்லை. விவசாயம் இருக்கின்றது மீன்பிடி இருக்கின்றது மற்றும் கனிய வளங்கள் இருக்கின்றது. பெற்றோல் பிரச்சனை என்றால் ஒரு சரியான அணுகுமுறையில் போய் நாங்கள் வளங்களை எடுக்கலாம். எண்ணெய் வளங்கள் இருக்கின்றது அவை எல்லாம் சேரும் பொழுது பொருளாதாரம் ஒழுங்கான முறைக்குள் வரும். ஆனால் இன்று பொருளாதாரம் சீர்குலைந்துவிட்டது. இதற்கு புதிய நடைமுறை ஒன்று இங்கு ஏற்படுத்த வேண்டும்.

**கேள்வி : ஆட்சி மாற்றம் இதற்கு உகந்தகா என்று கேட்டால் என்ன சொல்லுவீர்கள்?**

பதில் : ஆட்சியில் என்ன பிரச்சனை என்றால் மக்களை பொறுத்தவரையில் நம்பிக்கை இழந்துவிட்டார்கள். இந்த ஆட்சியில் நம்பிக்கை இழந்து மக்கள் எதிராக செயற்பட தொடங்கிவிட்டார்கள். இனி இந்த அரசு சரியான கட்டமைப்பை கொண்டுவருவது கடினம். நான் நினைக்கவில்லை இது நடக்குமென்று. ஏனென்றால் அவர்களின் சொல்லும் செயலும் வேறு வேறாக இருக்கின்றது.

**கேள்வி : உங்களது கருத்தின் படி ஒரு குடும்ப அரசியல் இந்த ஆட்சிக்கு சரிவராது என்று நினைக்கின்றீர்களா? அல்லது ஏன் இது சீர்குலைந்தது?**

பதில் : குடும்ப அரசியல் சரிவராது என்று நான் பார்க்கவில்லை. மக்கள் நம்பி இருந்தார்கள் பாதுகாப்பான ஒரு நிம்மதியான சூழ்நிலையை உருவாக்கும் என்று தான் சிங்கள மக்கள் நம்பினார்கள். ஆனால் அந்த நம்பிக்கை தலைகீழாக மாறிவிட்டது. எனவே அவர்கள் மீண்டும் மக்களை தங்களது பக்கத்துக்கு கொண்டுவருவது என்பது சாத்தியமற்ற விடயம்.

**கேள்வி : சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, அல்லது மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்ச, கோட்டபாய ராஜபக்ச, ரணில் இதில் எந்த ஆட்சி வந்தால் சுமுகமான தீர்வை கொண்டுவரலாம் என நீங்கள் நினைக்கின்றீர்கள்?**

பதில் : எந்த ஆட்சி வந்தாலும் கோட்டபாய. மகிந்த இந்த சூழ்நிலை இனி சாத்தியப்படாது. அதை ஒரு பக்கம் விடுங்கள். ஏனைய ஆட்சி ரணிலோ அல்லது சஜித் பிரேமதாஸாவோ எவர் வந்தாலும் இனி எங்களது நாட்டின் கொள்கையில் பாரிய மாற்றம் கொண்டுவர வேண்டும். அந்த கொள்கை எப்படியிருக்க வேண்டும் என்றால் இந்த நாடு ஒரு பல்லின மக்கள் வாழக்கூடிய ஒரு ஜனநாயக நாடாக ஏற்றுக்கொண்டு இனவாதங்களை கைவிட்டு எங்களது சுய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதை நோக்கமாக கொண்ட யாராவது ஒருவர் வந்தால் இதை மீண்டும் கட்டியெழுப்பலாம். இல்லையென்றால் கஷ்டம்.



**கேள்வி : நீங்கள் ஒட்டுமொத்த இலங்கையின் பிரச்சனையை தான் சொல்லுகின்றீர்கள். இப்பொழுது இருக்கும் நிலையில் விவசாய முன்னெடுப்பு பிரச்சினை, எரிபொருள் பிரச்சினை டொலரின் பிரச்சினை அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் போன்றன இந்த அரசாங்கம் நலிவடைந்து போகின்ற போக்கைத் தானே காட்டுகின்றது?**

பதில் : அரசாங்கம் தோல்வியடைந்துவிட்டது தானே. இதற்கு பிறகு ஒன்றும் செய்யமுடியாது தானே.

**கேள்வி : ஜனாதிபதி உரையாற்றுகின்றார் தான் 17 பேரைக்கொண்ட குழு ஒன்றை செய்வதற்கான அதிரடி நடவடிக்கை எடுக்கின்றேன். மக்கள் குழம்ப வேண்டிய அவசியம் இல்லையென இதை நம்பலாமா? தன்னிறைவு பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்றால் அதை எந்த ஆங்கிலில் கொண்டு போகலாம்?**

பதில் : அதனை மக்கள் நம்பமாட்டார்கள். எந்த ஆங்கிலில் என்றால் நான் சொன்ன விடயங்கள் அனைத்தும் இதில் கடைப்பிடிக்க வேண்டும். ஒன்று இனப்பிரச்சனையை தீர்க்க வேண்டும் என்றால் அல்லது ஓரளவேனும் குறைக்க வேண்டும் என்றால் ஒரு பன்மைத்துவ நாடாக முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும் ஆட்சியாளர்கள். பன்மைத்துவ நாடு என்றால் புத்த நாடு அந்த நாடு இந்த நாடு என்று சொல்வதை விட்டுவிட்டு பன்மைத்துவ நாடாக பல மதம் பல கலாச்சாரம் கொண்ட ஒரு நாடாக முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு ஏற்றுக்கொண்டால் பிரச்சனைகள் ஓரளவு தீரும். இனங்களுக்கிடையில் இருக்கின்ற முரண்பாடுகள் குறையும்.

**கேள்வி : இந்த நாட்டில் மூன்று விதமான பிரச்சனைகள் இருக்கின்றது. இனவாதம் தேசியவாதம் மதவாதம் எனவே இவ் மூன்றையும் வைத்து தான் இவ்வளவு காலமும் பிரச்சனைகள் தொடர்கின்றது.**

பதில் : அரசு முதலில் தேசியவாதத்தை கைவிட வேண்டும். பன்முக தன்மை கொண்ட நாடாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும். இது ஒன்று. அதன் பின்னர் சுய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பொருளாதார திட்டத்தை வகுக்க வேண்டும். அதில் மதத்தலையீடு வேறு ஒரு தலையீடும் இருக்க கூடாது. சுய பொருளாதாரத்தை முக்கியமாக கொண்ட ஒன்றை 10 வருட திட்டத்தில் கொண்டு வந்தால் அது ஓரளவுக்கு சாத்தியப்படும்.

**கேள்வி : மிகப்பெரும் பொருளாதார வீழ்ச்சிக்கு சீனா தான் காரணம் என்று கூறப்படும் விடயத்தை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா? அல்லது அது தொடர்பாக உங்களது கருத்து என்ன?**

பதில் :இல்லை இல்லை. சீனா காரணம் என்றில்லை. உண்மையான காரணம் இந்த நாட்டில் கொள்கை மீது ஏற்பட்ட பிரழ்வு தான். இவர்கள் நீண்ட காலமாக கடைப்பிடித்து வந்த கொள்கையில் ஏற்பட்ட பிரழ்வு தான் இந்த பொருளாதார பிரச்சனை.

**கேள்வி : சீனா கடன் கொடுக்கும் நேரம் ஒரு வங்கியினூடாகத்தானே கொடுத்திருக்கின்றது. ஏனைய நாடுகள் ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொடுத்திருக்கின்றார்கள். சீனா வங்கியின் ஊடாக கொடுக்கப்பட்டிருக்கின்றது. எனவே எப்படியும் இது திருப்பிக்கொடுக்கப்பட வேண்டிய கடன். மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் போர்ட்சிற்றி போன்றன எல்லாம் நீண்ட கால குத்தகை அடிப்படையில் அரசாங்கத்திடமிருந்து சீனா எடுத்திருக்கின்றது. அதில் இன்னொரு அரசாங்கம் வந்தாலும் இவர்களுடைய ஒப்பந்தத்தை இரத்து செய்ய முடியாமல் தொடர்ந்தும் செய்து கொண்டு போகும் அளவிற்கு தான் நீண்ட கால குத்தகை அடிப்படையிலான ஒப்பந்தம் இருக்கின்றது. எனவே சீனா இவ்வாறிருக்கும் சூழலில் ஏனைய நாடுகள் எதிர்ப்பை வெளியிட்டிருக்கின்றது. இது குறித்து உங்களது கருத்து என்ன?**

பதில் : சீனாவினுடைய கொள்கையை கடைப்பிடித்து கொண்டால் எல்லா நாடுகளும் அதுக்கேற்ற மாதிரி செயற்படும். இது நீங்கள் பாம்புக்கு தலையையும் மீனுக்கு வாலையும் காட்டிக்கொண்டு திரிந்தால் அது சரிவராது. அப்படியொரு நிலைப்பாட்டில் இருக்காமல் நீங்கள் ஒரு கொள்கையை தந்து நாங்கள் எங்களது நாட்டை முன்னேற்ற வேண்டும் என்று சொல்லி சர்வதேச சமூகம் முதலில் உங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் இன்று சர்வதேச சமூகத்தின் பார்வையில் இந்த அரசும் இந்த குடும்பமும் சீனாவினுடைய ஒரு கூடிய வரவேற்கத்தக்க சமூகமாக கருதப்படுகின்றது. எனவே இந்த அரசாங்கம் இருக்கும் வரையும் இனி மீண்டும் அதை கட்டியெழுப்புவது சாத்தியப்படாதல்லவா. எனவே அரசியல் மாற்றம் ஒன்று வரும்பொழுது முன்னர் சிறிமா கடைப்பிடித்த அந்த கொள்கையை கடைப்பிடித்தால் எப்படியென்றால் வரும் அரசாங்கம் ஜே.வி.பியுடன் ஒரு உடன்படிக்கையை மேற்கொள்ள வேண்டும். அவர்களின் பொருளாதார கொள்கையை கொஞ்சம் கடைப்பிடிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். அவர்களுடன் நல்ல உறவை ஏற்படுத்தி ஏனென்றால் அவர்களின் கொள்கை உண்மையாக ஒரு தேசிய கொள்கை தான் ஆனால் அவர்கள் உடனடியாக ஆட்சிக்கு வந்து செயற்படுவதில்லை.

ஆனால் வரும் அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என்றால் அதனை வென்று வடக்கு கிழக்கில் இருக்கின்ற தமிழர்களின் ஆதரவை பெறக்கூடிய அரசாங்கமாக வந்தால் என்ன நடக்கும் என்றால் வடக்கு கிழக்கில் இருக்கின்ற தமிழர்களின் மிகப்பெரிய பொருளாதாரம் உலக நாடுகளில் சிதறியிருக்கின்றது. எனவே வடக்கு கிழக்கு ஏதோ ஒன்றின் அதிகாரத்திற்கு வரவேண்டும். அதோடு இனி வரும் பொழுது ஜே.வி.பி பலம் கூடுதலாக தான் வருவார்கள். ஆட்சி அமைக்கும் அளவிற்கு வராது ஒரு கூடிய பலத்துடன் வருவார்கள். அதையும் கடைப்பிடித்து இதையும் நீங்கள் செய்து இங்கிருக்கும் சிறுபான்மையினத்தையும் திருப்திப்படுத்தக்கூடியளவு ஒரு ஆட்சி முறையை மேற்கொண்டால் அது மிக குறுகிய காலத்தில் பொருளாதாரத்தை கட்டியெழுப்பலாம். அதைவிட தொடர்ந்து இனவாத ஆட்சி தான் கடைப்பிடித்து நாங்கள் இதை தான் மேற்கொள்வோம் என செயற்பட்டால் அது சாத்தியப்படாது. ஏனென்றால் இது மிக நீண்ட கால கொள்கையில் ஏற்பட்ட பிரழ்வு தான் இன்று ஒட்டுமொத்தமாக வந்திருக்கின்றதே தவிர இது தனி ஒரு அரசாங்கத்தினால் வரவில்லை.

**கேள்வி : எல்லா கடன்களையும் இந்தியா நிவர்த்தி செய்து அதை அடைக்கின்றோம் என்று தானே? இந்தியா சொல்லுகின்றது. இந்தியாவின் உடன்படிக்கைக்கு ஏன் இலங்கை அரசாங்கம் தற்பொழுது வருகிறது இல்லை?**

பதில் : இந்தியா இலங்கையை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் எடுக்கப்பார்க்கின்றது. சீனா தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் எடுக்கப்பார்க்கின்றது. இவை நடப்பதற்கு இங்கிருக்கும் மேற்கத்தைய நாடுகளுடன் உடன்பாடுள்ளவர்கள் அதில் இருப்பவர்கள் கட்டாயமாக இரண்டையும் குழப்புவார்கள். இது தான் உண்மையான பிரச்சனை. நாங்கள் இவ்வளவு காலத்திற்குள் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப போகின்றோம் அதற்கான ஒரு அரசாங்கத்தை கொண்டு வந்து எப்படியிருக்க வேண்டும் என்றால் நிச்சயமாக தெற்கில் இருக்கின்ற ஒரு தற்பொழுது இருக்கும் அரசாங்கத்திற்கு எதிராக நான் நினைக்கின்றேன். சஜித் பிரேமதாஸாவின் அரசாகத்தான் வரவேண்டும். ஆனால் சஜித் பிரேமதாஸா தனித்து தான் எழுச்சியாக வந்து அதே மாதிரியானதொரு போக்கில் வேறொரு முகத்தோடு அவர் செயற்பட தொடங்கினால் அதுவும் தோல்வியில் தான் முடியும்.

**கேள்வி : இது தொடர்பான தமிழ் தரப்பு இந்த கட்டத்தில் ஒன்று ஆர்ப்பாட்டம் நடந்து கொண்டிருக்கின்றது தென்னிலங்கையில் சிங்கள மக்களும் ஒரு பாரிய குழப்பத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். கட்டுப்பாட்டு விலை சம்மந்தமான விடயங்களில். அடுத்த பக்கத்தில் அரசியல் ரீதியான ஒரு பிரச்சனை உலக நாடுகள் எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றது உலக சந்தையில் ஏற்பட்ட மாற்றங்கள். அடுத்தது சீனா இந்தியா அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையில் தனது காலனித்துவத்தை கொண்டுவர வேண்டும் என்ற நிலைப்பாட்டில் செய்துகொண்டிருக்கின்றது. இந்த நிலையில் தமிழ் தரப்பு டீ.என்.ஏ தமிழ் தேசிய மக்கள் முன்னணி போன்ற கட்சிகள் தமிழ் மக்களுக்கான ஒரு சாதகமான நிலைப்பாட்டை கொண்டுவருவதற்கு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் ?**

பதில் : அரசாங்கம் வந்தவுடன் அநேகமாக அனைத்து விடயங்களையும் சிங்கள பேரினவாதிகளின் கையில் கொடுத்து அவர்களுடைய விருப்பத்திற்கேற்ற வகையில் அரசை ஆட்சி செய்யத் தான் முயற்சி செய்தது. அதன் நிமித்தம் தான் திருகோணமலையிலுள்ள பிரச்சனையாக இருக்கலாம். தண்ணி முறிப்பில் புத்தர்களை நிறுவ தொடங்கியதாக இருக்கலாம் எல்லாம் அதன் வெளிப்பாடு தான். ஆனால் இன்று அது புறம்தள்ளக்கூடிய சூழல் இந்த பொருளாதாரத்தினால் வந்திருக்கின்றது. அது தமிழனுக்கு நன்மையோ தீமையோ? என்னவென்று தீமையாக இருக்கும் நீங்கள் சொல்லுகின்றீர்கள். வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்திற்கு தீமை செய்யப்படுவது நன்மையா?

**நேர்காணல் : இரணியன்**

11ஆம் பக்கம் பார்க்க...



# பிராந்திய செய்திகள்



## தங்கத்தின் விலை 160,000 ரூபாவாக அதிகரிப்பு

இலங்கையில் தங்கத்தின் விலை எதிர்பாராத விதமாக அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. தங்கத்தின் விலை மேலும் அதிகரித்துள்ளதாக கொழும்பு செட்டியார் தெருவில் உள்ள தங்க உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, 24 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 160,000 ரூபாவாகும். அத்துடன் 22 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 148,000 ரூபாவாகும்.





## வவுனியா சிறைச்சாலையிலிருந்து கைதி ஒருவர் தப்பியோட்டம்!

வவுனியா சிறைச்சாலையிலிருந்து கைதி ஒருவர் தப்பியோடியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வவுனியா பகுதியில் வீடுகளில் கொள்ளையில் ஈடுபட்டவர் எனும் சந்தேகத்தின் பேரில் வவுனியா கூமாங்குளத்தினை சேர்ந்த 20 வயது மதிக்கத்தக்க இளைஞரே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் தப்பியோடியுள்ளார்.

இவர் அன்று(18) அதிகாலை நேரத்தில் சிறைச்சாலையிலிருந்து தப்பித்து சென்றுள்ளதுடன் தப்பிச் சென்ற இக்கைதியைத் தேடி வவுனியா சிறைக்காவலர்கள் வவுனியா பொலிசாருடன் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## திடீரென பற்றி எரிந்த பேருந்து

தம்புள்ளை - அனுராதபுரம் வீதியின் புலகல பிரதேசத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்று தீப்பற்றி எரிந்துள்ளது.

அன்றிரவு(17) பயணிகளை ஏற்றிச் சென்ற போது குறித்த பேருந்து தீப்பிடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அப்போது பேருந்தில் பயணிகள் இருந்த போதிலும் யாருக்கும் எதுவும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் தம்புள்ளை பொலிஸார் விசேட விசாரணை ஆரம்பித்துள்ளனர்.



## இந்திய கடன் திட்டத்தின் கீழ் பொருட்கள் இறக்குமதி

இந்திய கடன் முறையின் கீழ், அத்தியாவசிய பொருள் இறக்குமதிக்கான இறக்குமதியாளர்களை பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்திற்கான இறக்குமதியாளர்கள் பதிவு செய்யப்படுவதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. இந்தியா மற்றும் இலங்கைக்குக்கு இடையில் ஏற்படுத்திக் கொண்டுள்ள இணக்கப்பாட்டிற்கு அமைய, அத்தியாவசிய உணவுப் பொருள், மருந்துகள், சீமெந்து, துணி வகைகள், விலங்குணவுகள், விசேட உர வகைகள், தொழிற்சாலைக்கு பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களை இறக்குமதியாளர்கள் இதன் போது பதிவு செய்து கொள்ள முடியும்.

இவ்வாறான பொருட்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய விரும்பும் இறக்குமதியாளர்கள் www.trade.gov.lk என்ற இணையதளத்திற்கு சென்று எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும் என வர்த்தக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களை 0762 566 047 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும்.



## போதியளவு எரிபொருள் வழங்கப்படாமையால், வரிசை தொடர்கிறது!

எரிபொருள் நிரப்பு நிலையங்களினால் முன்பதிவு செய்யப்பட்ட எரிபொருள் இருப்புக்கள் கிடைக்கப் பெறாததால் எரிபொருள் நெருக்கடி அதிகரித்துள்ளதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு போதியளவு எரிபொருளை வழங்காத அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என தொழிற்சங்கவாதியான ஆனந்த பாலித தெரிவித்துள்ளார.

## யானை தாக்குதலுக்கு உள்ளாக பெண் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்

யானை தாக்கி படுகாயமடைந்த 3 பிள்ளைகளின் தாயார் 4 நாள்களின் பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். மன்னார் முருங்கன் - அடம்பன் பகுதியில் கடந்த 13ஆம் திகதி அதிகாலையில் வீட்டு வளாகத்துக்குள் புகுந்த யானை குடும்பப்பெண்ணைத் தாக்கியுள்ளது.

இதன்போது 46 வயதுடைய சதனாந்தன் சுதா என்ற குடும்பப்பெண் உயிரிழந்தார். அதிகாலை ஒரு மணிக்கு வீட்டுக்கு முன் உள்ள வீதியில் சத்தம் கேட்டுள்ளது. அதனால் வெளியே வந்த குடும்பத்தலைவர் ரோச் லைட் அடித்து பார்த்துள்ளார். அவரது மனைவியும் வீட்டு முற்றத்துக்கு வந்துள்ளார். அப்போது யானை ஒன்று வீட்டு வளாகத்துக்குள் நுழைந்து இருவரையும் தாக்க வந்துள்ளது. அதனால் கணவர் வீட்டுக்குள் நுழைந்து கதவை பூட்டியுள்ளார். வீட்டுக்கு வெளியில் இருந்த மனைவி ஓடி மறைவாக இருந்துள்ளார். வீட்டுக்குள் நுழையாத யானை மறைவில் இருந்த பெண்ணைத் தாக்கிவிட்டு அங்கிருந்த மரங்களையும் அடித்து முறித்துவிட்டுச் சென்றுள்ளது. யானை தாக்கி படுகாயமடைந்த பெண், மன்னார் மருத்துவனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

எனினும் நான்கு நாள்களின் பின் அன்று(17) முற்பகல் 9 மணிக்கு சிகிச்சை பயனின்றி குடும்பப்பெண் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா மருத்துமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க அறிக்கையிட்டார்.

## அரசுக்கு எதிராக ஐ.தே.க. 25இல் சத்தியாக்கிரகப் போராட்டம்

ஐக்கிய தேசியக் கட்சியின் சத்தியாக்கிரகப் போராட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியுமே குறித்த சத்தியாக்கிரகப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்தில் ஐ.தே.கவுக்கு ஆதரவு வழங்கும் தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர்.

## எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் மீண்டும் ஆரம்பம்

இடைநிறுத்தப்பட்ட எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் அன்று(18) காலை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

3,500 மெற்றிக்தொன் எரிவாயு கொண்ட கப்பலில் இருந்து எரிவாயுவை இறக்கும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டதாக நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. அதனடிப்படையில் அன்று(18) காலை முதல் உள்நாட்டு பாவனைக்கான எரிவாயு சிலிண்டர்களை விற்பனை நிலையங்களுக்கு விநியோகிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## சுழிபுரத்தில் வாள்களுடன் வீடு புகுந்து கொள்ளை!

யாழ்.வட்டுக்கோட்டை - சுழிபுரம் பறாளை வீதியில் உள்ள வீடொன்றில் அன்று(வியாழக்கிழமை) நள்ளிரவு வாளுடன் புகுந்த இருவர் வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தி நகைகளை கொள்ளையடித்துள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நள்ளிரவில் வாளுடன் வீட்டுக்குள் புகுந்த இருவர் வீட்டிலிருந்தவர்களை வாள் முனையில் அச்சுறுத்தி, ஒரு பவுண் சங்கிலி, அரைப்பவுண் தோடு, அரைப்பவுண் மோதிரம் மற்றும் 25 ஆயிரம் ரூபாய் பணத்தை கொள்ளையடித்து சென்றுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சினிமா துளிகள்



## இடுப்பழகை காட்டி ரசிகர்களை கிறங்க வைத்த ஷெரின்

சமீபத்தில் பிக்பாஸ் நிகழ்ச்சி மூலம் மிகவும் பிரபலமடைந்த நடிகை ஷெரின் இடுப்பழகை காட்டி எடுத்த புகைப்படம் வைரலாகியுள்ளது.

செல்வராகவன் இயக்கத்தில் 2002ம் ஆண்டு வெளியான துள்ளுவதோ இளமை படத்தின் மூலம் தமிழ் சினிமாவுக்கு அறிமுகமானவர் நடிகை ஷெரின். தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழி படங்களிலும் நடித்துள்ளார். கமல் தொகுத்து வழங்கிய பிக்பாஸ் நிகழ்ச்சியின் 3வது சீசனில் கலந்துக் கொண்டு மிகவும் பிரபலமானார்.

பிக்பாஸ் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட போது குண்டாக இருந்த ஷெரின் அதன்பின் 10 கிலோ வரை உடல் எடையை குறைத்து ஸ்லிம்மாக மாறினார். அவ்வப்போது சமூக வலைத்தளத்தில் புகைப்படங்களை வெளியிட்டு வரும் ஷெரின் தற்போது மஞ்சள் நிற சேலையில் இடுப்பழகை காட்டி ரசிகர்களை கிறங்க வைக்கும் புகைப்படத்தை வெளியிட்டுள்ளார். இந்த புகைப்படங்கள் சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.



## ஒரு பாட்டுக்கு ஆட ராஷ்மிகா கேட்ட சம்பளம்!



புஷ்பா வெற்றிக்கு பிறகு தென்னிந்திய சினிமாவில் முன்னணி ஹீரோயினாக வளர்ந்து நிற்கிறார் ராஷ்மிகா மந்தனா. தற்போது அவர் ஒரு பாட்டுக்கு ஆட கேட்ட சம்பளம் அனைவரையும் அதிர வைத்து இருக்கிறது.

நடிகை ராஷ்மிகா மந்தனாவுக்கு தற்போது ஹிந்தியிலும் அதிக பட வாய்ப்புகள் குவிந்து வருகிறது. புஷ்பா அடுத்த பாகத்திலும் ராஷ்மிகா நடிக்க இருக்கிறார்.

மேலும் அவர் அடிக்கடி பல முன்னணி ஹிந்தி இயக்குனர்கள் அலுவலகத்திற்கு செல்லும் புகைப்படங்களும் வைரல் ஆகின்றன. அவர் ஹிந்தியில் விரைவில் அதிகம் பிஸியான நடிகையாக வலம்வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு பாட்டுக்கு சம்பளம்

அர்ஜீன் ரெட்டி பட புகழ் இயக்குனர் சந்தீப் வங்கா ரெட்டி இயக்கத்தில் ரன்பீர் கபூர் நடிக்க உள்ள அனிமல் என்ற படத்தில் ஒரு பாட்டுக்கு மட்டும் ஆட ராஷ்மிகாவை கேட்டிருக்கின்றனர்.

அதற்காக அவர் 2 கோடி ரூபாய் சம்பளமாக கேட்டிருக்கிறார் என தகவல் வெளியாகி இருக்கிறது. இது அனைவருக்கும் ஷாக் கொடுத்து இருக்கிறது.

சமந்தா "ஊ சொல்றியா மாமா" பாட்டுக்கு 5 கோடி ரூபாய் சம்பளம் பெற்றார் என டோலிவுட்டில் சொல்லப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## புதிய கவர்ச்சி உடையில் ரகுல் பிரீத் சிங்... வைரலாகும் புகைப்படங்கள்



தமிழ், தெலுங்கு உள்ளிட்ட மொழிகளில் நடித்து பிரபலமான நடிகை ரகுல் பிரீத் சிங்கின் புதிய புகைப்படம் வைரலாகி வருகிறது.

தமிழில் அருண்விஜய் நடித்த 'தடையற தாக்க' என்ற திரைப்படத்தின் மூலம் ஹீரோயினாக அறிமுகமானவர் ரகுல் பிரீத் சிங். அதன்பின், கார்த்தி ஜோடியாக 'தேவ்', 'தீரன் அதிகாரம் ஒன்று', சூர்யாவின் 'என்ஜிகே' உள்ளிட்ட படங்களில் நடித்து பிரபலமானார். தற்போது சிவகார்த்திகேயன் ஜோடியாக 'அயலான்' படத்தில் நடித்துள்ளார். இதுதவிர பாலிவுட் மற்றும் டோலிவுட் திரையுலகிலும் முன்னணி ஹீரோக்களுக்கு ஜோடியாக நடித்து வருகிறார்.


இவர் அடிக்கடி தனது சமூக வலைத்தள பக்கத்தில் கவர்ச்சி புகைப்படங்களை வெளியிட்டு வருவார். இந்நிலையில், தற்போது புதிய உடையில் எடுத்த புகைப்படத்தை ரகுல் பிரீத் சிங் பகிர்ந்துள்ளார். அவர் படுத்திருப்பதை போன்று எடுக்கப்பட்ட புகைப்படங்கள் தற்போது சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

## அக்ஷன் அவதாரம் எடுத்த ஆண்ட்ரியா

மைனா சாட்டை போன்ற தரமான சமூக அக்கரையுள்ள மிக உன்னதமான திரைப்படங்களை எடுத்த ஷாலோம் ஸ்டுடியோஸ் ஜாண்மேக்ஸ் அவர்களின் தயாரிப்பில் ஆறாவது படைப்பாக "கா" திரைப்படம் வெளி வருகிறது.

ஆக்சன் அவதாரம்

இதில் ஆண்ட்ரியா முதன்மை கதாபாத்திரத்தில் காட்டுக்குள் சென்று பறவைகள், விலங்குகளை புகைப்படம் எடுக்கும் புகைப்பட கலைஞராக முதன் முறையாக ஆக்சன் அவதாரம் எடுத்திருக்கிறார். விஜய் நடித்த வேட்டைக்காரன் படத்தில் மிரட்டலான வில்லனாக நடித்த சலீம் கவுஸ் வனத்துறை அதிகாரியாக நடித்திருக்கிறார். இவர்களுடன் சின்னத்திரை புகழ் கமலேஷ், காற்றுக்கென்ன வேலி புகழ் அக்ஷிதா, சூப்பர் டீலக்ஸ் பட புகழ் நவீன், கும்கி பட புகழ் மூணார் சுப்பிரமணியன் ஆகியோருடன் அர்ஜீன் சிங் என்கிற புதுமுக நடிகரும் நடித்துள்ளனர்.



அடர்ந்த காட்டுக்குள் ஷூட்டிங்

முழுக்க முழுக்க காட்டின் பின்னணியில் இத்திரைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. கதை, திரைக்கதை, வசனம் எழுதி நாஞ்சில் இயக்கியுள்ளார். கத்தால கண்ணாலே பாடல் புகழ் சுந்தர் சி பாபு இசையமைக்க, அறிவழகன் ஒளிப்பதிவு செய்ய, எலிசா படத்தொகுப்பை செய்துள்ளார்.

மேலும் சேது அவர்களின் சிறப்பு சப்தமும், தரணி அவர்களின் மிரட்டல் ஒலி கலவையும் இப்படத்தின் சிறப்பம்சமாக பேசப்படும். படம் பார்ப்பவர்களை ஒரு அடர்ந்த காட்டுக்குள் சென்று வந்த திகில் அனுபவத்தை நிச்சயமாக கொடுக்கும்.படம் ஏப்ரல் மாதம் திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. மேலும் ஷாலோம் ஸ்டுடியோஸ் தங்களது ஏழாவது படைப்பாக ஸ்ரீகாந்த், தினேஷ் மாஸ்டர் நடிப்பில் "சம்பவம்" என்கிற திரைப்படத்தையும் தயாரித்து வருகிறது.

# நேட்டோவின் கண் முன்னே சரணடையவுள்ள உக்ரைன்




உக்ரைன்- ரஷ்யா யுத்தம் ஆரம்பித்து தற்போது மூன்று வாரங்கள் அண்மித்துள்ளது. தற்போதும் யுத்தம் நடைபெறுகிறது. உயிரணு ஆயுதங்கள். இரசாயன ஆயுதங்கள் தொடர்பில் கலந்துரையாடல் நடைபெறுகின்றது. உண்மையில் யுத்தத்தினிடையே இருப்பது குரோதம். குரோதம் இருக்கக்கூடிய யுத்தம் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நியாயத்தை உண்டுபண்ணாது. உக்ரைன் உயிர் அணு ஆயுதங்களை தயாரிப்பதாக ரஸ்யா ஐக்கிய நாடுகள் சபைக்கு முறைப்பாடு ஒன்றை முன்வைத்துள்ளது.

யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட தொடக்கம் கருத்து முரண்பாடு தீவிரமடைந்த காலத்தில் அதேபோன்று நாட்டின் கிழக்கு உக்ரைனின் இரு மாவட்டங்களை சுயாதீன இராச்சியமாக ஏற்றுக்கொண்ட சந்தர்ப்பத்திலும், அவற்றைப் பாதுகாப்பதற்காக ரஷ்ய இராணுவத்தை அனுப்பிய சந்தர்ப்பத்திலும் புட்டினுக்கு சர்வதேச ரீதியாக நல்ல வரவேற்பு இருந்தது. இருப்பினும் அவர் உக்ரைனை ஆக்கிரமிக்க அனுமதி வழங்கியதும். அதனால் புட்டினின் சர்வதேச அங்கீகாரம் வீழ்ச்சியடைந்தது. உண்மையில் அதற்கு ஏதுவாக அமைந்த பிரதான காரணமாக மேற்கத்திய ஊடகங்கள் மூலம் புட்டின் இரத்தத்தைக் குடிக்கின்ற ஒரு பைத்தியக்காரன் என்ற அடிப்படையில் யுத்தத்தை காரணம் காட்டி முன்வைத்தமையே ஆகும்.

மேற்கத்தேய ஊடகங்கள் யுத்தம் தொடர்பில் கதைக்கவில்லை. அதனுடைய விபரீதத்தை அவர்கள் காட்டினார்கள். இருப்பினும் யுத்தம் இடம் பெறுவதற்கு ஏதுவான காரணங்களை கதைக்கவில்லை. அவற்றை காட்டவில்லை. அதனால் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது இரண்டாவது மூன்றாவது வாரங்களில் உக்ரைன் ஜனாதிபதி வீரனாக மாறினார். மேற்கத்தய ஊடகங்கள் சொலன்ஸ்கியை வீரனாக காட்டியது. அது மிகைப்படுத்தப்பட்ட தன்மையுடன் கொண்டதாகும்.

உண்மையில் வீரனாக வருவதற்கு சொலன்ஸ்கி எந்த ஒரு விடயத்தையும் செய்யவில்லை என்று ரட்டே ரால குறிப்பிடவில்லை. சில சந்தர்ப்பங்களில் சொலன்ஸ்கி துணிச்சலான தீர்மானங்களை எடுத்தார். இருப்பினும் தீர்மானம் எடுக்கப்பட்டது யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர். இருப்பினும் ஒட்டுமொத்த பொறிமுறையின் உள்ளே அவர் தோல்வியடைந்துள்ளார்.

தற்போது ரஷ்யா-உக்ரைன் தொடர்பில் மத்தியஸ்தமான கருத்து வெளியில் வந்துள்ளது. அதற்கேற்ப அந்த யுத்தத்தின் முதலாவது குற்றவாளியாக அமைவது சொலன்ஸ்கியே.இரண்டாவது குற்றவாளி அமெரிக்கா உட்பட நேட்டோ. மூன்றாவதுதான புட்டினின் பக்கம் கை நீண்டுள்ளது. ரஷ்யா உக்ரைன் தொடர்பில் ரணிலும் சிறந்த பகுப்பாய்வினை மேற்கொண்டிருந்தார். உண்மையில் சொலனஸ்கி மேற்கொண்ட இந்த ராஜதந்திர தவறுகள் காரணமாக உக்ரைன் மக்கள் உயிர்கள் மூலமாக இழப்பீடு செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது.

பல ஆயிரக்கணக்கானவர்கள் அங்கவீனமுற்றுள்ளார்கள். 10 இலட்சத்துக்கு மேல் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளார்கள். கீவ், கார்கேவ், மரியோபோலில் கூட்டு புதைகுழிகள் வெட்டப்படுவதனை காணக்கூடியதாக உள்ளது. அதே போன்று எந்த ஒரு தவறும் செய்யாத மக்கள் அடக்கம் செய்யப்படுகிறார்கள். சில உக்ரைன் நாட்டவர்கள் வீரர்களைப் போன்று தங்களுடைய நாட்டுக்காக உயிர் தியாகம் செய்கிறார்கள்.

ரஷ்ய இராணுவத்தினர் தற்போது கீவ் நகரத்துக்கு அருகாமையில் இருக்கின்றார்கள். மூன்று பக்கத்தாலும் நகரத்தில் உள்நுழைவதற்கான சந்தர்ப்பம் காணப்படுகின்றது. இந்த ஆக்கம் எழுதுகின்ற வரை அந்த குழுவினர் நகரின் வடக்கு பக்கத்தின் மூலமாக பிரவேசித்து கொண்டிருக்கின்றார்கள். நகருக்கு தூரத்தில் இருக்கக் கூடிய குழுவினர் மூன்று கிலோ மீட்டர் அளவில் தற்பொழுது உள்ளனர். எவ்வாறு இருப்பினும் ரஷ்யா இராணுவத்தினர் தாக்குதல்களை அதிகரித்துள்ளனர். அடுத்ததாக அவர்களுக்கு தெரியும் உக்ரைனியர்கள் அவர்களுடைய தலைநகராகிய கீவ் நகரத்தை பாதுகாப்பதற்கு உயர்ந்த பட்சமாக முயற்சி செய்கின்றார்கள்.

உண்மையில் அந்த இடத்தில் இரண்டு பக்கத்திலும் பாரிய அழிவுகள் ஏற்படும். விசேடமாக ரஷ்யா இந்த இடத்தில் உயர்ந்த பட்சமாக விமானத் தாக்குதலை மேற்கொள்ளலாம். அதனால் பாரிய உயிர் அழிவுகள் ஏற்படும். இரண்டு பக்கத்தில் இருக்கக்கூடிய இராணுவத்தினர் இல்லாமல் தற்போது உத்தியோகப்பற்றற்ற தகவலின்படி 3000 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இறந்துள்ளார்கள். தற்போது ரஷ்யா உக்ரைனின் மேற்கு பகுதிக்கு தாக்குதலை ஆரம்பித்து உள்ளது. அதாவது போலந்து பக்கத்திற்கு உக்ரேனிற்கு தேவையான உதவிகள் அந்தப் பக்கத்தில் இருந்தே கிடைக்கின்றது.

அதேபோன்று சாதாரண மக்கள் வெளியேறுவதும் அந்தப் பக்கத்தினால்தான். இங்கு ரஷ்யா அபாய எச்சரிக்கைகளை பல தடவை விடுத்துள்ளது. குறிப்பாக மேற்கத்தேயத்திற்கு வழங்கல் செய்யப்படும் பாதைகளுக்கு அபாய எச்சரிக்கை விடப்பட்டிருக்கிறது. அடுத்ததாக மேற்கத்தேய எல்லையருகே அல்லது நேட்டோ எல்லைக்கு மரண பீதியை கொண்டு சென்றுள்ளார்கள். உண்மையில் இந்த இடத்தில் போலந்து எல்லையில் தாக்குதல் ஒன்று நடைபெறும் ஆக இருந்தால் நிலைமை மேலும் மோசமடையும்.

அதேபோன்று கீவ்வில் தற்போது போராட்டம் நடைபெறும் பிரதேசங்களில் உக்ரைன் இராணுவத்தினரினால் ஏற்படுத்தப்படுகின்ற அழுத்தத்தை குறைப்பதற்கும அவர்கள் அவ்உபாய நுட்பத்தை கையாளுகின்றனர். எவ்வாறு இருப்பினும் தற்போது ஒரு விடயம் வெளிப்படையாகத் தெரிகின்றது.

தற்போது உக்ரைன் முழுவதுமே பாதுகாப்பற்றதாக காணப்படுகின்றது. இன்னும் தடுத்து வைத்திருக்க கூடியளவுக்கு பாரிய எதிர்பார்ப்பு இருப்பதாக காணவில்லை. அவர்களுக்கு இருக்கக்கூடிய ஒரே ஒரு எதிர்பார்ப்பு உக்ரைன் இராணுவத்தினர் மாத்திரமே. அதுவும் இராணுவத்தினரின் உள்ளத்தை நீண்டநாள் தைரியப்படுத்துவதற்கு வைத்திருப்பதற்கு முடியாது என்பதே ரட்டே ராலவின் எண்ணமாகும்.

கீவ் நகரம் வீழ்ந்ததும் அனைத்து விடயங்களும் முடிவடைந்து விடும். அது தான் இரண்டு பக்கத்தினதும் நோக்கமாக காணப்படுகின்றது. உக்ரைன் அதிகாரிக்களின் கருத்துக்களுடே அவர்களது தோல்வி குறித்து வெளியாகின்றது. அவர்களது கருத்துக்களை பகுப்பாய்வு செய்து பார்த்தால் அதனை தெளிவாக காணக்கூடியதாக உள்ளது. தற்போது ஒரு விடயம் வெளிப்படையாக உள்ளது. ரஷ்யா தங்களுடைய இராணுவத்தினரிற்கு எந்தவிதமான பாதிப்புக்கள் ஏற்படினும் கீவ்வை கைப்பற்றும் நோக்கோடு உள்ளார்கள்.

ரஷ்ய இராணுவத்தினர் கீவ்விற்கு 40 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள போதே சொலன்ஸ்கியின் சத்தம் சிறிது சிறிதாக குறைவடைந்தது. சொலன்ஸ்கி கயிற்றை விழுங்கியவர் என்று குறிப்பிட முடியாது. அதற்கு கயிறு என்று குறிப்பிடுவது நியாயமற்றது. அதைவிட பெரியது ஒன்று என்று தான் குறிப்பிட வேண்டும். இருப்பினும் இவ்வளவு பெரிய அதனை எவ்வாறு விழுங்கினார் என்று நினைத்துக் கொள்ள முடியாமல் இருக்கின்றது.

இருப்பினும் சொலன்ஸ்கி உண்மையில் சொலன்ஸ்கிக்கு நேட்டோ மட்டுமல்ல ஐரோப்பிய சங்கமும் கைவிட்டு விட்டார்கள். நேட்டோ இல்லையாயின் ஐரோப்பா சங்கமாவது உறுப்புரிமையை தாருங்கள் என்றே சொலன்ஸ்கி கோரிக்கை விடுத்தார்.

இருப்பினும் மேற்கத்தேயம் அது தொடர்பில் எந்த ஒன்றையும் குறிப்பிடவில்லை. அவர்கள் zoom தொழில்நுட்பம் மூலமாக தங்களுடைய பாராளுமன்றத்தில் உரையாடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியதுடன் இதனை கேட்டுக்கொண்டு அதற்கு கைதட்டல்களை வழங்கியது மாத்திரமே.சொலன்ஸ்கி உள்ளிட்ட உக்ரைனை பலியடையச்செய்ய செய்வதற்கான கைதட்டல்களே அவை. உக்ரைன் இறுதியாக நேற்று முன்தினம் நேட்டோ அங்கத்துவத்தை கோரியிருந்தது. இருப்பினும் அவ்வாறு வழங்கவில்லை என்றால் தாம் ஐரோப்பாவினுள் நடுத்தர நாடாக இருக்க போவதாக அதன் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தெரிவித்தார். அக்கருத்தின்படி இவ்வளவு காலமும் அவர்கள் நடுத்தரமற்ற முறையில் தான் செயற்பட்டுள்ளார்கள். நேட்டோவின் ஆட்டத்திற்கு அவர்கள் செயற்பட்டுள்ளார்கள். அவ்வாறாயின் உண்மையில் இது கேட்டுப் பெற்றுக் கொண்டுள்ள விடயமே. சொலன்ஸ்கிக்கு இன்னும் சிறிய சந்தர்ப்பம் இங்கு காணப்படுகின்றது. இதனை ராஜதந்திர அடிப்படையில் தீர்த்து வைப்பது. அதாவது ரஷ்யாவுக்கு தேவையான சான்றிதழை வழங்குவது. இல்லை என்றால் இன்னும் நேட்டோவின் உறுப்புரிமைக்கு நாட்டு மக்களை பலி கொடுப்பதற்கு எந்த உரிமையும் சொலன்ஸ்கிக்கு இருக்கின்றதா?

ரட்டே ரால நினைப்பது சொலன்ஸ்கி தற்போது இந்தப் பிரச்சினையை தீர்க்க முற்படல் மேற்கத்தையத்தோடு அல்ல ரஷ்யாவுடன் தான். அவ்வாறு இல்லாமல் இன்னமும் ரஷ்யாவுக்கு சவால் விடுத்து கொண்டும் ரஷ்ய ராணுவத்தினரை காட்டி அவர்களை கீழ்ப்படிய செய்யும் வகையில் இன்னும் ரஷ்யாவை கோபமடைய செய்வதாக இருந்தால். உண்மையில் சொலன்ஸ்கிக்கு அகால மரணம்தான் ஏற்படவுள்ளது என்பதனை குறிப்பிடமுடியும்.அவர் ஏற்றுக்கொள்கின்றார் தங்களுக்கு உரிய தூண்டுகோளை வழங்கியது நேட்டோவென்று.சொலன்ஸ்கி தற்போது நாட்டு மக்களுக்கு உரையாற்றுகின்ற சந்தர்ப்பத்தில் நேட்டோவை கடுமையாக தாக்குகின்றார்.

ரஷ்யாவின் பெலோ அரசியல் கொள்கையானது மேற்கத்திய கொள்கையில் இருந்து முற்றிலும் மாறுபட்டதாக காணப்படுகிறது. தங்களோடு போராட்டத்திற்கு வருகின்றவர்களை பாதுகாப்பதற்கு ரஷ்ய கடும்முயற்சியை மேற்கொள்கின்றது.யுத்தத்திற்கு முன்னால் மாத்திரமல்ல சர்வதேசத்திற்கு முன்னால் ஒன்றாக முகம் கொடுப்பதற்கு அவசியமான செயற்பாடுகளை எடுத்துள்ளது. அதற்காக இரண்டு நாடுகளும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான தீர்மானத்தை எடுத்துள்ளது.

உண்மையில் நேட்டோ கைவிடுகின்ற சந்தர்ப்பத்தில் புட்டின் மற்றும் பெலோ ரஷ்ய ஜனாதிபதி இடையே ஏற்படுத்தப்படுகின்ற இந்த பொறிமுறையானது ரஷ்யாவுடன் கூட்டிணைந்து செயற்படக்கூடியவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கான ஒரு முறையாகும். ரஷ்யா நேட்டோ போன்று கைவிட்டுச் செல்வது இல்லை என்ற உறுதிமொழி இதன் உள்ளே காணப்படுகின்றது. எவ்வாறு இருப்பினும் மேற்கத்தேய ஆயுதங்களை பயன்படுத்தி ரஷ்ய இராணுவத்தை தோல்வியடையச் செய்ய முடியும் என்று உக்ரைன் நம்பிக்கை கொள்ள முடியாது. தற்போது நினைக்கவேண்டும் தங்களுடைய நாட்டு மக்களுடைய உயிரை மீண்டும் பலிகொடுப்பதா? இல்லையா? என. அவ்வாறு இல்லை என்றால் கீவ் வீழ்ந்த பின்னர் கீழப்படிதலை அறிவிக்க வேண்டியே ஏற்படும். இருப்பினும் அதை செய்வதற்கு முன்னர் சொலன்ஸ்கி என்ற ஒருவர் இருப்பாரோ இல்லையோ தெரியாது.

**பைஷல் இஸ்மாயில்**



06ஆம் பக்க தொடர்ச்சி...

நாட்டினது பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான விடயங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதைவிட்டுவிட்டு, மக்கள் மீது தொடர்ந்தும் கடன் சுமத்தப்பட்டுள்ளது. வரி, வட்டி அதிகரிக்கப்பட்டுள்ளது. விலையேற்றத்தால் சம்பளம் அதிகரிக்கப்பட்டாலும் மக்கள் வாழ முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மலையகப் பகுதிகளில் தேயிலைத் தொழிலுக்குச் செல்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கு போதிய உற்பத்தியின்மையால் அவர்களுக்கான ஒரு கிழமைக்கான வேலை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மாதமொன்றிற்கான அவர்களது சம்பளம் பாதிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் வேலை வாய்ப்பின்மை பிரச்சினையும் சம்பளப் பிரச்சினையும் தலையெடுத்துள்ளது. நாட்டின் சகல துறைகளும் இன்று பாதிப்பினை எதிர்நோக்கியுள்ளன. தீர்க்கப்படவேண்டிய பல பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசின் இயலாமை வெளிப்பட்டுள்ளது என்பதுவே உண்மை.

அரசிற்குள் தொடரும் இழுபறி நிலையால் அரசினை வழிநடத்திச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் தற்போதைய அரசின் பங்காளிக் கட்சியின் தவிசாளராகவிருந்தும் அரசின் செயற்பாடுகள் தொடர்பில் கடும் விமர்சனத்தை முன்வைத்து வருகின்றார். மக்களது வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கானத் தீர்வினை வழங்குவதில் அரசின் அசமந்தப் போக்கினைக் கண்டித்து தொடர்ந்து நாடு முழுவதும் மக்கள் தமது கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். அரசின் குடும்ப ஆட்சி தொடர்பில் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றது. ஏற்கனவே குடும்ப ஆட்சியை மக்கள் விரும்பாத சூழல் இந்நாட்டில் நிலவியது.

கொவிட் வைரசின் பின்னரான திடீர் விலையேற்றங்களை மக்கள் ஈடுகொடுக்க முடியாமல் திணறி வருகின்றனர். உச்சக்கட்ட விலையேற்றங்களால் நாடு பட்டினிச் சாவினை எதிர்நோக்கவேண்டிய நிலை கூட வரலாம். உணவுப்பொருட்களுக்கான தட்டுப்பாடு தற்போதே வந்துவிட்டது. இன்னும் இலங்கையில் விலையேற்றம் அதிகரிக்கப்படலாம் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது. எனவே இனியாவது அரசு கட்டுக்கோப்புக்குள் வந்து மக்களது நலனைக் கருத்திற்கொண்டு வினைத்திறனாகச் செயற்படுமா?. நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து இலங்கையின் இன்றைய பொருளாதார நிலைக்கு கைகொடுக்கக்கூடிய ஏதுவான நிலைமை உருவாகி தேசிய அரசு அமையுமா? அல்லது மக்கள் போராட்டங்களால் ஆட்சி மாற்றம் நிகழ்த்தப்படுமா? என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**02ஆம் பக்க தொடர்ச்சி...**

எனவே நல்லாட்சி அரசாங்கம் ஒன்றை நிறுவுவதன் ஊடாக மைத்திரிபால சிறிசேன போன்ற தலைவர்களை கொண்டுவருவதன் ஊடாக ஏதோவொரு நன்மை நடக்குமாக இருந்தால் அது நன்றாக இருக்கும். ஆனால் அந்த நல்லாட்சி அரசாங்கத்தை செயற்படுத்த வந்த மைத்திரிபால சிறிசேன தான் இந்த ஆட்சியை அவர்களிடம் ஒப்படைத்தார். இறுதியிலே அவருக்கே ஒரு அமைச்சுப் பதவியேனும் இல்லாத கட்டத்திலே சிறிலங்கா சுதந்திர கட்சி அதாவது ஏணியாக பயன்படுத்திவிட்டு தற்பொழுது இருக்கக்கூடிய அரசாங்கம் சென்றிருக்கின்றது. ஆகவே தற்பொழுது மைத்திரிபால சிறிசேன அவர்கள் நன்கு இதை உணர்ந்திருப்பார். தொடர்ந்தும் எப்படி இந்த நாட்டை கட்டியெழுப்புவது தொடர்பான விடயங்களை ஆராய வேண்டியிருக்கின்றது. எனவே தொடர்ந்தும் இந்த நாட்டிலே நல்லாட்சி அரசாங்கம் ஒன்றை அமைத்து தமிழ் மக்களுக்கான தீர்வின் ஒரு பகுதியேனும் பெற்றுக்கொண்டு அல்லது அவர்களுக்கான ஒரு சுபீட்சமான வழியை உருவாக்கி டயஸ்போராக்களை உள்வாங்கிக்கொண்டு அதனூடாக இந்த பொருளாதாரத்தை இந்த நாட்டிலே கட்டியெழுப்புவதன் ஊடாக இந்த நாட்டை ஒரு சுபீட்சமான நாடாக மாற்றமுடியும்.

**07ஆம் பக்க தொடர்ச்சி...**

**கேள்வி : கூடுதலாக ஆறையாடும் தன்மை இல்லை தமிழ் தரப்பு போய் இந்த காலகட்டத்தில் அவர்களுக்கு கைகொடுக்கப்போவதாக ஒரு செய்தி தற்பொழுது வெளிவந்திருக்கின்றது நேற்று முன்தினம். அதைத்தான் நான் கேட்கின்றேன்?**

பதில் : கைகொடுக்கப்போகவில்லை. மற்றும் இந்த சூழ்நிலை அடிப்படையிலுள்ள தமிழர்களின் பிரச்சனையை பின்போட்டிருக்கின்றதா? இல்லையா? பின்போட்டிருக்கு எனவே அது நன்மையா?தீமையா. நன்மை என்பது தான் உண்மை.

**கேள்வி : நீங்கள் சொல்லும் விடயம் சரி நான் கேட்பது என்னவென்றால் தமிழ் தரப்பு போய் ஒரு பொறியில் மாட்டப்போகின்றது என்ற செய்தியும் வந்திருக்கின்றது தானே?**

பதில் : இல்லையே. அதாவது அவர்கள் பேச்சு வார்த்தைக்கு அழைத்த விடயம் எங்களது நாட்டு பிரச்சனையை தீர்ப்பதற்கு அல்ல. அவர்களுக்கு ஐ.எம்.எப் ஆல் விதிக்கப்பட்ட சிந்தனைகள். ஐ.எம்.எப் பல விடயங்களை சொல்லியிருக்கின்றது என்ன சொல்லியிருக்கின்றது அது தெரியுமா உங்களுக்கு ஐ.எம்.எப் 5 வருட மீளப்பில் பிரி எடிவ்கேசனை நிப்பாட்ட சொல்லுகின்றார்கள். பிரி மெடிக்கல் நடவடிக்கைகளையும் குறித்த கால அடிப்படையில் நிப்பாட்ட சொல்லுகிறார்கள்.

அடுத்து அவர்கள் சொல்வது என்னவென்றால் வெளிநாட்டில் இருக்கும் உற்பத்திகள் இங்கு இறக்குமதி செய்யும் பொருட்களுக்கான வரிகளை குறைத்து மக்களுக்கு கூடிய வரியை கொடுத்து மக்களுக்கு சமுர்த்தி வழங்குவதை எல்லாம் நிறுத்துமாறு என்று அவாகள் ஆலோசணை சொல்லுகின்றார்கள். இவர்களுக்கு வேறு வழியில்லை எனவே அவர்கள் தனியாக செய்ய தொடங்கினால் மக்கள் அடிப்பார்கள். அவர்கள் தனியாக நின்று கொண்டு இலவச கல்வியை நிறுத்தலாம் என சொல்லலாமோ? சொல்ல முடியாது.

எனவே இந்த நிலைமையை சீர் செய்வதற்காக அவர்கள் பாராளுமன்றத்தில் இருக்கின்ற அனைத்து கட்சிகளையும் அழைத்திருக்கின்றார்கள். இதற்கு ஒரு தீர்வை கொண்டுவாருங்கள் என்று கேட்கின்றார்கள். ஐ.எம்.எப் சொல்லுகின்றது எங்களது பொருளாதார நிலைமை இப்படியிருக்கின்றது நீங்கள் எரியும் நெருப்பில் எண்ணெய்யை ஊற்றுகின்றீர்கள் எனவே மக்களின் நிலையை என்ன செய்யலாம் என நீங்களே சொல்லுங்கள். அப்படியாயின் வாருங்கள் நாங்கள் ஒன்றாக சேர்ந்து நெஷனல் அரசாங்கத்தை உருவாக்குவோம். எல்லாரும் சேர்ந்து அரசாங்கத்தை உருவாக்குவோம்.

இங்கு எதிர் கட்சியும் இல்லை சரி உங்களது கதையை நான் கேட்கின்றேன். என்னுடைய கதையை நீங்கள் கேளுங்கள் எதிர்க்கட்சி இல்லாத பாராளுமன்றத்தை உருவாக்குவோம் என்று அவர்கள் சொல்லவருகின்றார்கள். அவர்கள் இந்த நிலைமையை இப்படி கொண்டுவருகின்றார்கள். அவர்களின் கையில் அதிகாரம் இருப்பதால் இந்த நிலை ஓரளவு சீராகவிட்டு தொடங்கலாம் என அவர்கள் நினைக்கின்றான். அதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்கின்றார்.

**கேள்வி : அந்த முயற்சிக்கு ரணில் போகமாட்டேன் என்று சொல்லியிருக்கின்றார். ஏனைய கட்சிகளும் அதற்கு உடன்படமாட்டார்கள்.**

பதில் : அவர்கள் போறார்கள் போகவில்லை என்பதெல்லாம் அடுத்த கட்டம். ஆனால் அவர்கள் அதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்றார்கள். இதற்கான சாதகமான சூழல் ஏற்படுவதற்காக அவர்களை வெளியெற்றுகின்றார்கள். இப்படியான நிகழ்வுகளை தற்பொழுது நடந்துகொண்டிருப்பதை நீங்கள் பார்த்தீர்கள் தானே. எங்களை பொறுத்தவரையில் இது சாத்தியப்படாது என்றாலும் கூட நாங்கள் என்ன செய்ய வேண்டும்.

என்றால் எங்களுக்கு இந்த அரசாங்கம் இருப்பது தான் சாதகம். தமிழர்களுடன் போராடிய இராணுவ வீரனிடம் கேட்டால் அவர் ஒரு கதையை சொல்லுகின்றார். 10 வருடம் 20 வருடம் பிரபாகரனுடன் சண்டை போட்டு பிரபாகரனை அழித்தோம் ஆனால் பிரபாகரனிடம் நாட்டை கொடுத்திருந்தால் இன்று அவரிடம் கடனை வாங்கியிருக்கலாம் என்று அடிபட்டவன் சொல்லுகின்றார்.

இதை சொல்லக்கூடிய சூழ்நிலை சிங்கள மக்கள் மத்தியில் உருவாகியிருக்கின்றது. இதை சொன்னாலும் அதற்கு கைதட்டுமளவு நிலையில் சிங்களவர்களின் மனநிலை மாறியிருக்கின்றது. இது தமிழ் சமூகத்திற்கு சாதகமோ பாதகமோ? சிங்கள அரசாங்கம் சிங்கள மக்களால் அடிவாங்குவது தானே தமிழ் மக்களுக்கு சாதகம். பிறகு ஏன் நீங்கள் இதைப்பற்றி யோசிக்கின்றீர்கள் இந்த அரசாங்கத்தை வைத்திருப்பதற்கு அவர் உதவி செய்தால் என்ன செய்யாவிட்டால் என்ன நீங்கள் ஏன் உணர்ச்சிவசப்படுகின்றீர்கள்.

**கேள்வி : நாங்கள் உணர்ச்சிவசப்படுவதை விட தமிழ் தரப்பு கட்சிகளே சில மாற்றுகொள்கைகளை நேற்று முன்தினம் ஊடகங்களில் முன்வைத்திருக்கின்றது. அதற்காகக் தான் நான் உங்களுடைய பதிலை எதிர்பார்க்கின்றேன். நீங்கள் சொல்லும் விடயம் தென்னிலங்கையில் ஒரு பிரளயம் ஏற்படும் பொழுது அது எங்களுக்கு சாதகமான தன்மையை ஏற்படுத்துமே தவிர அல்லது இன்னும் விளக்கமாக சொல்லப்போனால் இந்த அரசாங்கம் இருப்பது தான் தமிழர்களுக்கு சாதகமாக அமையும் என்று சொல்லவருகின்றீர்கள் அப்படித்தானே?**

பதில் : ஆம் அந்த சூழ்நிலையை மாற்றும் தெற்கில் உள்ள இனவாத சூழ்நிலையை மாற்றி நாங்கள் எங்களுக்குள் அடிபடுவதால் தான் எங்களிடம் இருக்கின்ற வளங்களை நாங்கள் சரியான முறையில் பயன்படுத்த முடியாமல் இந்த நிலைமைக்கு போயிருக்கின்றோம் என்ற சூழ்நிலையில் சிங்கள மக்கள் வரவேண்டும். வந்தால் தான் இந்த நாட்டு பிரச்சனைகளில் அவை ஈடுபடும். இந்த நிலைமையை கோட்டபாய உருவாக்கவில்லை. இது ஜே.ஆரில் இருந்து தொடரப்பட்ட விடயம் இன்று வெடித்திருக்கின்றது. அவ்வளவும் தான்.

**கேள்வி : இந்த அரசாங்கத்தை தமிழ் தரப்பு ஆதரிப்பதால் எங்களுக்கு பாதிப்பு இல்லையா?**

பதில் : நாங்கள் ஆதரிக்கவில்லை. நாங்கள் பங்காளர்களும் இல்லை எதிராளர்களும் இல்லை நாங்கள் சூழ்நிலையை அவதானிக்கின்ற அவதானிகள் (பார்வையாளர்கள்) மட்டும் தான். ஏனென்றால் வினை விதைத்தவன் வினை அறுக்கின்றான் நாங்கள் என்ன செய்வது.

**கேள்வி : இந்தியா இதனை பயன்படுத்தி தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வை கொடுக்கும் என்று நினைக்கின்றீர்களா?**

பதில் : அப்படியான சில நடவடிக்கைகள் வரலாம் நாங்கள் அதை பயன்படுத்த மாட்டோம் என்றது ஒரு விடயமே தவிர அதை பிரதானமாக எடுக்கக்கூடாது. உண்மையாக எங்களுக்கு இருக்கின்ற சாதகமான பிரதானமான விடயம் என்னவென்றால் சிங்கள மக்கள் மத்தியில் மனமாற்றம் ஏற்படுத்தபடலாம். அவர்கள் எங்களுக்கான நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளுகின்ற சூழ்நிலை வருகிறதா இதைத்தான் நாங்கள் பார்க்க வேண்டும். ஏனென்றால் பிரச்சனை எங்கள் இரண்டு பேருக்கும் தான். பிரச்சனை சிங்கள தேசத்திற்கும் தமிழ் தேசத்திற்கும் தான்.

**கேள்வி : இனவாதத்தை அரசாங்கம் தொடர்ந்தும் கையில் எடுத்தால் இன்னும் பாரிய விளைவுகளைத் தான் அரசாங்கம் சந்திக்குமே தவிர ஒரு தேசிய நல்லிணக்க அரசாங்கத்தை உருவாக்கி அதனூடாக தீர்மானத்தை பல்லினத்துவக்கிற்குரிய வழிகளில் போனால் இந்த நாடு தற்பொழுது இருக்கும் சூழ்நிலையை மாற்றிக்கொள்ளலாம் என்பது உங்களின் கருத்து அப்படித்தானே?**

பதில் : ஆம். தமிழனுக்கு சம உரிமையை கொடுக்கும் என்பதை சிங்கள சமூகம் நிரூபித்தால். உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் கடனை அடைத்துவிட்டு போவார்கள்.

## அப்துல்கலாம்பொன்மொழிகள்

**உங்களால் உங்கள் எதிர்காலத்தை மாற்ற முடியாது, ஆனால் உங்களால் உங்கள் பழக்கவழக்கங்களை மாற்றிக் கொள்ள முடியும், மேலும் உங்கள் பழக்கவழக்கங்கள் நிச்சயமாக உங்கள் எதிர்காலத்தை மாற்றிவிடும்.**

**மழையின் போது அனைத்து பறவைகளும் மறைவிடத்தைத் தேடுகின்றன. ஆனால் கழுகு மேகங்களுக்கு மேலே பறப்பதன் மூலம் மழையைத் தவிர்க்கிறது. சிக்கல்கள் பொதுவானவை தான், ஆனால் அணுகுமுறை வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது.**

**நம்பிக்கை மற்றும் கடின உழைப்பு இரண்டும் தோல்வி எனும் நோயைக் கொல்ல சிறந்த மருந்து. இது உங்களை ஒரு வெற்றிகரமான நபராக மாற்றும்.**

**ஒரு சிறந்த புத்தகம் நூறு நல்ல நண்பர்களுக்குச் சமம், ஆனால் ஒரு நல்ல நண்பன் ஒரு நூலகத்திற்கு சமம்.**

**வெற்றியின் ரகசியம் என்ன? சரியான முடிவுகள். சரியான முடிவுகளை நீங்கள் எவ்வாறு எடுக்கிறீர்கள்? அனுபவம் மூலம். அனுபவத்தை நீங்கள் எவ்வாறு பெறுகிறீர்கள்? தவறான முடிவுகள் மூலம்.**

**சூரியனைப் போல நீங்கள் பிரகாசிக்க விரும்பினால், முதலில் சூரியனைப் போல எரியுங்கள்.**

**உங்கள் வாழ்க்கையில் உள்ள கஷ்டங்கள் உங்களை அழிக்க வரவில்லை, ஆனால் உங்களுக்குள் மறைந்திருக்கும் ஆற்றலையும் சக்தியையும் உணரவைப்பதற்கு வருகின்றன, நீங்களும் கடினமானவர் என்பதை கஷ்டங்கள் அறிந்து கொள்ளட்டும்.**

**கனவு என்பது தூங்கும் போது காண்பதல்ல, உங்களைத் தூங்க விடாமல் செய்வதே கனவு.**

**உங்கள் முதல் வெற்றியின் பின்னர் ஓய்வெடுக்காதீர்கள், ஏனெனில் நீங்கள் இரண்டாவதாக தோல்வியடைந்தால், உங்கள் முதல் வெற்றி அதிர்ஷ்டம் என்று சொல்ல அதிக உதடுகள் காத்திருக்கின்றன.**

**ஒருவரைத் தோற்கடிப்பது மிகவும் எளிதானது, ஆனால் ஒருவரை வெல்வது மிகவும் கடினமானது.**

**நீங்கள் புகழுடன் பிறந்தால், அது ஒரு விபத்து. நீங்கள் புகழுடன் இறந்தால், அது ஒரு சாதனை.**

**கற்றல் படைப்பாற்றலைத் தருகிறது, படைப்பாற்றல் சிந்தனைக்கு வழிவகுக்கிறது, சிந்தனை அறிவைத் தருகின்றது, அறிவு உங்களைச் சிறந்தவராக மாற்றுகின்றது.**

**என்னைப் பொறுத்தவரை, எதிர்மறையான அனுபவம் என்று எதுவும் இல்லை.**

**நேர்மையுடன் செயல்படுங்கள், நேர்மையாக வெற்றி பெறுங்கள்.**

**உங்களைச் சுற்றியுள்ள சூழல் என்னவாக இருந்தாலும், உங்களின் நேர்மையைக் கடைப்பிடிப்பது எப்போதும் சாத்தியமாகும்.**

**ஈடுபாடு இல்லாமல் உங்களால் வெற்றிபெற முடியாது. ஈடுபாட்டுடன் உங்களால் தோல்வியடைய முடியாது.**

**சுறுசுறுப்பாக இருங்கள், பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள், நீங்கள் நம்பும் விஷயங்களுக்காக வேலை செய்யுங்கள். நீங்கள் அவ்வாறு செய்யாவிட்டால், உங்கள் தலைவிதியை மற்றவர்களிடம் ஒப்படைக்கிறீர்கள்.**

இலங்கை கலைஞர்களுக்கும்
வாய்ப்பளிப்பேன்
நடன இயக்குனர் கலா மாஸ்டர் உடனான
சிறப்பு நேர்காணலின் தொடர் வருகின்ற
கிழமை பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்
என்பதை வாசகர்களுக்கு
அறியத்தருகின்றோம்



# பல்சுவை கதம்பம்



## கண்களுக்கான தக்காளி மாஸ்க்

உங்கள் முகத்தில் அசிங்கமான தோற்றத்தைத் தரும் கருவளையங்கள் உள்ளதா? அதைப் போக்க பல பொருட்களையும் பயன்படுத்தியுள்ளீர்களா? இருப்பினும் எவ்வித பலனும் கிடைக்கவில்லையா? அப்படியானால் தக்காளியின் தோல் நல்ல பலனைத் தரும். இதில் உள்ள வைட்டமின் சி சருமத்தை சுத்தம் செய்வதோடு, சருமத்தில் உள்ள முதுமைக்கோடுகளைக் குறைக்கும். அதற்கு தக்காளியின் தோலை கண்களைச் சுற்றி வைத்து ஊற வைத்து, கழுவ வேண்டும். இதனால் கருவளையங்கள் மாயமாய் மறையும்.

## தக்காளி ஸ்க்ரப்

உங்கள் சருமத்தில் அதிக அழுக்குகள் இருப்பது போன்ற உணர்வு எழுகிறதா? அதாவது உங்கள் முகம் பொலிவிழந்து கருமையாக காணப்படுகிறதா? அப்படியானால் தக்காளி ஸ்க்ரப் பயன்படுத்துங்கள். அதற்கு தக்காளியை வெட்டி, அதை சர்க்கரை/நாட்டுச் சர்க்கரையில் தொட்டு கருமையாக காணப்படும் சருமத்தில் சிறிது நேரம் மென்மையாக தேய்த்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இப்படி செய்வதால் சருமத்தில் உள்ள இறந்த செல்கள் நீங்கி, சருமம் பொலிவோடு காணப்படும்.

### தக்காளி மற்றும் தேன் மாஸ்க்

ஒரு பௌலில் 2 டேபிள் ஸ்பூன் தக்காளி கூழ் மற்றும் ஒரு டீஸ்பூன் தேன் சேர்த்து கலந்து பேஸ்ட் செய்து, சருமத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து, பின் வெதுவெதுப்பான நீரால் கழுவ வேண்டும். இப்படி வாரத்திற்கு 2 முறை செய்து வந்தால், ஒரு நல்ல மாற்றத்தை சருமத்தில் காணலாம்.

### தக்காளி மற்றும் எலுமிச்சை ஃபேஸ் பேக்

உங்கள் சருமத்தை பொலிவோடும், பிரகாசமாகவும் ஜொலிக்க வைக்க வேண்டுமா? அப்படியானால் ஒரு டீஸ்பூன் தக்காளி விழுதுடன், 3-4 துளிகள் எலுமிச்சை சாற்றினை சேர்த்து கலந்து, கருமையாக இருக்கும் முகத்தில் தடவி 10 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவ வேண்டும். இப்படி தினமும் ஒருமுறை செய்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும். முக்கியமாக இந்த ஃபேஸ் பேக் வறண்ட சருமம் கொண்டவர்களுக்கு ஏற்றதல்ல.

### தக்காளி மற்றும் தயிர் ஃபேஸ் பேக்

தக்காளியில் வைட்டமின் சி என்னும் ஆன்டி-ஆக்ஸிடன்ட் அதிகம் உள்ளது மற்றும் இது ஒரு சருமத்தை பிரகாசமாக்கும் பொருளும் கூட. அத்தகைய தக்காளி சாற்றினை 2 டேபிள் ஸ்பூன் எடுத்து, அத்துடன் கடலை மாவு மற்றும் ஒரு டீஸ்பூன் தயிர் சேர்த்து கலந்து, சருமத்தில் தடவி நன்கு காய வைத்து, பின் குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும். இப்படி அடிக்கடி மாஸ்க் போட்டு வந்தால், சருமம் பிரகாசமாகவும், வெள்ளையாகவும் இருக்கும்.

## உருளைக்கிழங்கு சிப்ஸ் செய்முறை

தேவையான பொருட்கள்

உருளைக் கிழங்கு – அரைக் கிலோ (மீடியம் சைஸ்)

மிளகாய்த் தூள் – 1 டீஸ்பூன்

பெருங்காயத் தூள் – அரை டீஸ்பூன்

உப்பு, எண்ணெய் – தேவைக்கு.

செய்முறை :

உருளைக்கிழங்கு சிப்ஸ்

உருளை கிழங்கை நன்கு கழுவி துடைத்து எடுக்கவும். இப்படி மெலிதாக சீவி வைக்கவும். அடுப்பில் வாணலி வைத்து தேவைக்கு எண்ணெய் விட்டு சூடு செய்யவும்.

மிளகாய்த் தூள் , உப்பு, பெருங்காயத் தூள் சேர்த்து கலந்து வைக்கவும். எண்ணெய் காய்ந்ததும் கொஞ்சம் கொஞ்சமாக சீவிய உருளைக் கிழங்கை போட்டு பக்குவமாக பொன்னிறத்தில் பொரித் தெடுக்கவும்.

சூட்டுடனேயே ரெடி செய்த பொடியைத் தேவைக்குத் தூவி குலுக்கவும். சுவையான உருளைக் கிழங்கு சிப்ஸ் ரெடி.



வண்ணங்களில் இல்லை வாழ்க்கை. மனித எண்ணங்களில் உள்ளது வாழ்க்கை !!!!



## பழங்கள் சாப்பிடுவதால் உடலுக்கு கிடைக்கும் நன்மைகள்

பழங்களில் இயற்கையாகவே நிறைய மருத்துவ குணங்கள் இருக்கின்றன. பழங்களில் உள்ள நன்மைகள் (Benefits of fruits) பற்றி சொல்லிக்கொண்டே போகலாம். நாம் தினமும் நமது உணவில் பழங்களை சேர்த்துக்கொள்ள தவறுகிறோம்.

துரித உணவு வகைகளுக்கு அடிமையாகி தினமும் அவற்றை உட்கொள்ள பழகிக்கொண்ட நாம் பழங்களை உணவில் சேர்த்துக்கொள்வதில்லை. இதனால் உடலின் சமநிலை பாதிக்கப்பட்டு உடலின் ஆரோக்கியம் குறைந்து பல நோய்கள் ஏற்படுகின்றன.

உடலின் அழகு, ஆரோக்கியம், வளர்ச்சி, நோய் எதிர்ப்பு சக்தி போன்ற அனைத்து விடயங்களுக்கும் பழங்கள் (Fruits) உதவுகின்றன.

### மாம்பழம்

மாம்பழத்தில் அதிகளவு ஆண்டி ஒக்சிடெண்ட்கள் (Anti-Oxidants) உள்ளன. அவை புற்றுநோய்க்கு எதிராக செயற்பட்டு உடலை பாதுகாக்கின்றன. இப்பழத்தில் விட்டமின் சி, நார்சத்து மற்றும் பெக்டீன் (Pectin) எனும் பதார்த்தம் அதிகமாக இருப்பதால் உடலில் உள்ள கெட்ட கொழுப்பை கரைத்து கொலஸ்ரோலை (Cholesterol) கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும். மாம்பழம் சாப்பிட்டால் அவற்றில் இருக்கும் இனிப்பு சுவை காரணமாக குளுக்கோஸின் அளவு அதிகரிக்கும் என மக்கள் நினைப்பார்கள்.

ஆனால் உண்மையிலேயே மாம்பழத்தில் க்ளைசெமிக் குறியீடு (Glycemic Index) குறைவாக இருப்பதால் நீரிழிவு நோயை அது கட்டுப்படுத்துகிறது. மாம்பழத்தில் அதிக நார்சத்து மற்றும் நீர் அடங்கியிருப்பதால் சீரான முறையில் சமிபாடு அடையும். மலச்சிக்கல் வராமல் தடுக்கும். அத்துடன் விட்டமின் ஏ அதிகமாக அடங்கியிருப்பதால் தலைமுடி நன்றாக வளரும். மேலும் விட்டமின் ஏ இருப்பதால் பொலிவான தோலை பெறலாம். கண்பார்வைக்கும் மாம்பழம் மிகச்சிறந்தது.

### அப்பிள்

அப்பிள் பழத்தில் உள்ள கரையக்கூடிய நார்பொருளானது குடலிலுள்ள கெட்ட கொலஸ்ட்ரோலை கரையச்செய்து ஆரோக்கியமான உடலுக்கு வழிவகுக்கும்.

தினமும் ஒரு அப்பிள் சாப்பிட்டு வர இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை குறையச்செய்து நீரிழிவு நோயை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறது.

நீரிழிவு நோய் உள்ளவர்கள் இப்பழத்தை அவசியம் உண்ணவேண்டும்.

அப்பிளில் உள்ள ஆண்டி ஒக்சிடெண்ட் எலும்புகள் உறுதியாக பெரிதும் உதவுகிறது. மேலும் இப்பழம் பித்தப்பையில் பித்தக்கற்கள் உருவாவதை தடுக்கின்றன.

ஃப்ளவொனொய்ட் க்வார்செடீன் (Flavonoid Quercetin) எனும் பதார்த்தம் இரத்த குழாய் நாளங்களின் வீக்கத்தை குறைத்து உயர் இரத்த அழுத்தம் ஏற்படுவதை தடுக்கின்றது.

### திராட்சை

இப்பழத்தில் மிக அதிகளவு தாவர ஊட்டச்சத்துகள் அடங்கியுள்ளன. எனவே பல வகையான புற்றுநோய்கள் வராமல் பாதுகாக்கின்றதோடு இதயத்தை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கும் இப்பழம் பெரிதும் உதவுகிறது. தினமும் திராட்சை சாப்பிடுவதால் முகம் அழகாகவும் மேனி பொலிவாகவும் இருக்கும். தோல் சுருக்கங்கள் மறைந்து இளமை தோற்றம் என்றுமே காக்கப்படும். முக்கியமாக இப்பழத்தில் இருக்கும் ரெஸ்வெராட்ரோல் (Resveratrol) எனும் பதார்த்தம் முகப்பருக்களை நீக்கி முகத்திலுள்ள கிருமிகளை அழித்து பொலிவை தரக்கூடியது.

மேலும் இப்பதார்த்தம் விழித்திரை கலங்களை பாதுகாப்பதுடன் கண்விழி விறைப்பு நோய், கண்ணில் பூவிழும் நோய், நீரிழிவு நோயால் ஏற்படும் கண்நோய்கள் போன்றவை ஏற்படுவதை தடுக்கிறது. இப்பழத்தில் குறைந்த அளவு க்ளைசெமிக் குறியீடு இருப்பதால் இரத்தத்தின் சர்க்கரை அளவை கட்டுப்படுத்தும். நீரிழிவு நோயாளர்கள் இப்பழத்தை தினமும் உட்கொள்வது சிறந்தது.

### பேரீச்சம்பழம்

இதில் அதிகளவு நார்சத்துகள் அடங்கியுள்ளன. மலச்சிக்கல் பிரச்சினை இருப்பின் இப்பழத்தை உண்பதால் நல்ல பலனை பெறலாம். பேரீச்சம்பழத்தில் புரதம் அதிகமாக இருப்பதால் தசைகள் நன்றாக உறுதியை பெறுவதோடு உடம்பு வலுவாக இருக்கும். உடற்பயிற்சி செய்வோர் அவசியம் உட்கொள்ள வேண்டும். இப்பழத்தில் அதிகமாக மக்னீசியம், செப்பு, இரும்புச்சத்து, மங்கனீஸ் ஆகியன இருப்பதால் எலும்புகள் நன்றாக உறுதிபெறும்.

மேலும் ஒஸ்டியோபொரோசிஸ் (Osteoporosis) வராமல் தடுக்கின்றது. பேரீச்சம்பழத்தில் இருக்கும் பொட்டாசியம் நரம்பு மண்டலம் சீராக இயங்க வழிவகுக்கிறது. தினமும் இப்பழம் சாப்பிட்டு வரும் போது இரத்தத்தின் அளவு அதிகரிக்கும். பொதுவாக இரத்தம் குறைவாக இருக்கும் நோயாளர்களுக்கு வைத்தியர்கள் பேரீச்சம்பழம் உண்ணும்படி அறிவுறுத்துவார்கள்.

### மாதுளை

மாதுளை இயற்கையால் கொடுக்கப்பட்ட ஒரு அருமையான மருந்தாகும். இப்பழத்தில் இருக்கும் ஆண்டி ஒக்சிடெண்ட்கள் பருவத்திற்கு முந்திய வயதான தோற்றத்தை போக்கவல்லது. அத்துடன் இரத்தத்தின் செறிவை அதிகரிக்கிறது. மேலும் திடீரென காயம் ஏற்படும் வேளையில் அதிக இரத்த போக்கு ஏற்பட்டால் அதனை தடுத்து சீக்கிரமாக உறையச்செய்யும் ஆற்றல் இந்த பழத்திலுள்ள ஆண்டி ஒக்சிடெண்ட்களுக்கு உள்ளது.

தினமும் உட்கொள்ளும் சில உணவுகளில் உள்ள கொழுப்புகள் இரத்தக்குழாய்களில் படிந்து அடைப்பை ஏற்படுத்துகின்றன. மாதுளம்பழம் தினந்தோறும் உட்கொள்வதால் இரத்த நாளங்களில் உள்ள மேலதிக கெட்ட கொழுப்பை நீக்கி இரத்த ஓட்டத்தை சரிசெய்கிறது. மூட்டுக்களிலுள்ள சவ்வுப்பகுதியை வலுவடைய செய்து மூட்டு வாதம் வருவதை தடுக்கிறது.

### பப்பாளிப்பழம்


பப்பாளிப்பழம் உணவு சீராக சமிபாடு அடைய உதவும் சிறந்த பழமாகும். அதில் அடங்கியுள்ள பபாயின் (Papain) என்கிற செரிமான பொருள் நார்சத்துடன் இணைந்து உணவு ஜீரணமாக வழிவகுக்கிறது.

இப்பழத்தில் இருக்கும் நார்சத்து, பொட்டாசியம் மற்றும் விட்டமின் வகைகள் இருதய நோய்கள் வருவதை தடுக்கின்றன.

இப்பழம் இயற்கையான தோல் சுத்தப்படுத்தி என்று கூறலாம். அப்பழத்திலுள்ள நொதியமானது தோலிலுள்ள மாசுக்களை நீக்கி சுருக்கங்களை இல்லாமல் செய்து பிரகாசமான தோற்றத்தை கொடுக்கவல்லது.

பப்பாளி பழத்தில் அதிகளவு உள்ள விட்டமின் ஏ ஆனது கண்நோய்களிலிருந்து பாதுகாத்து கண்ணிற்கு நல்ல பார்வையை கொடுக்கக்கூடியது.

# ஒரு இரவு முழுவதும் தூங்காமல் விழித்திருந்தால் உங்கள் மூளைக்கு என்ன நடக்கிறது?



எமது வாழ்வில் இதுபோன்ற பல தவிர்க்க முடியாத தருணங்கள் உள்ளன. உங்கள் வகுப்பிற்கு மதிப்பீடொன்றை கையளிக்க வேண்டியிருக்கலாம், குடும்ப உறுப்பினர் ஒருவர் வைத்தியசாலையில் அவசர அறையில் இருக்கலாம், உங்கள் நிறுவனத்திற்கான ஒரு முக்கியமான வேலையாக இருக்கலாம் . ஆனால் ஒரு இரவு முழுவதும் விழித்திருப்பது உங்கள் உடலுக்கு எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும்.

நோர்வேயில் உள்ள நரம்பியல் விஞ்ஞானிகள் எங்கள் உடல்நலத்தில் ஏற்படக்கூடிய விளைவுகளை உற்று நோக்கினர். அதன் முடிவு மிகவும் பயங்கரமானதாக இருந்தது (நீங்கள் எப்போதாவது ஒரு தூக்கமில்லாத இரவை அனுபவித்திருந்தால் இது உங்களுக்கு புரிந்திருக்கும்). அவர்கள் இந்த ஆய்வில் ஆரோக்கியமான 21 இளைஞர்களை தொடர்ச்சியான DTI சோதனைகளுக்கு உட்படுத்தினர். இதன் மூலம் உடலின் நீரின் அளவும் நரம்பு மண்டலத்தின் ஆரோக்கியமும் கண்காணிக்கப்பட்டது.

இந்த இளைஞர்கள் 23 மணி நேரம் விழித்திருந்தனர். ஆய்வாளர்கள் ஆய்வின் போது சில கட்டுப்பாட்டு நிலைமைகளை பேணுவதற்காக, அவர்களுக்கு மது, காஃபின் அல்லது நிகோடின் உட்கொள்ள அனுமதிக்கவில்லை. மேலும் DTI ஸ்கேன் செய்வதற்கு முன்பு அவர்களுக்கு எதையும் சாப்பிடவும் அனுமதிக்கவில்லை. தூக்கமில்லாத ஒரு இரவுக்குப் பிறகு மூளைக்குள் இருக்கும் வெண்பொருளில் "குறிப்பிடத்தக்க" மாற்றங்களை 2015 இல் நடத்தப்பட்ட இந்த ஆய்வு சுட்டிக்காட்டியது. அதாவது மூளைக்குள் இருக்கும் நரம்பு இணைப்புகள் அழிய ஆரம்பிக்கின்றன.

தூக்கமில்லாத இரவுக்குப் பிறகு உங்கள் எண்ணங்களைச் சேகரிக்க முயற்சித்திருந்தால், நீங்கள் இதனை உணர்ந்திருப்பீர்கள். மூளையின் முக்கியமான பாகங்களான பெருமூளை இணைப்பி, மூளைத்தண்டு, மூளை நரம்பு முடிச்சு, மூளையின் முன் மடல் மற்றும் உச்சிப்பக்க மடல் பாதைகளை உள்ளடக்கிய பல இடங்களில் பெரும் மாற்றங்கள் காணப்பட்டன.

இந்த சேதம் எவ்வளவு நிரந்தரமானது என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் அடுத்த இரவு ஒரு நீண்ட தூக்கத்தால் இந்த அனைத்து சேதங்களும் சரிசெய்யப்படுமா என்பதும் இன்னும் அறியப்படவில்லை. எங்கள் நரம்பியல் திசுக்களின் வடிவமைப்பில் நடக்கும் இந்த மாற்றங்களுக்கு பிற காரணிகள் எவ்வளவு தூரம் பங்களிக்கின்றன என்ற கேள்வியும் உள்ளது. எனது கருதுகோள் என்னவென்றால், மூளையின் வெண்பொருளின் நுண்கட்டமைப்பில் ஒரு இரவு தூக்கமின்மையின் விளைவுகள் குறுகிய கால மற்றும் சாதாரண தூக்கத்தின் சில இரவுகளுக்குப் பிறகு குணமாக்கப்படும்

**டொர்ப்ஜோர்ன் எல்வ்சாஹகன்**

**என்று எழுத்தாளர் டொர்ப்ஜோர்ன் எல்வ்சாஹகன் ஒரு வலைப்பதிவு இடுகையில் கூறுகிறார்.**

**இருப்பினும், நாள்பட்ட தூக்கமின்மை மூளையின் கட்டமைப்பில் நீண்டகால மாற்றங்களுக்கு வழிவகுக்கும் என்று அனுமானிக்கலாம்**

டொர்ப்ஜோர்ன் எல்வ்சாஹகன் என்றும் அவர் ஒரு கருத்தை வெளியிடுகிறார்.

சில நேரங்களில் ஆய்வில் பங்கேற்ற இளைஞர்களின் மூளையின் நடத்தை ஒருவருக்கு போல் மற்றவருக்கு இருக்கவில்லை. இது நம்மில் சிலருக்கு தூக்கமின்மையின் விளைவுகளிலிருந்து சிறப்பாக பாதுகாக்கப்பட்ட உடல்கட்டமைப்பைக் கொண்டிருப்பதைக் குறிக்கிறது. இது ஒரு சிறிய ஆய்வு என்பதால் இதனைக் கொண்டு நாம் ஒரு முடிவை எடுக்க முடியாது.


ஆனால், குறுகிய நேர இடைவெளியில் கூடுதல் ஸ்கேன்களைச் செய்து மற்றும் பங்கேற்பாளர்களின் அன்றாட செயல்பாடுகளையும் கவனத்தில் கொண்டு ஆய்வு செய்தால் இதற்கான சரியான முடிவைப் பெற வாய்ப்புக்கள் அதிகம்.

ஏராளமான பிற ஆராய்ச்சியாளர்களும் இது போன்ற ஆராய்ச்சிகளில், தூக்கமின்மை நம் மரபணுக்களிலும் நமது மூளையிலும் மாற்றங்களை ஏற்படுத்தும் என்று சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே, இது நாம் அனைவரும் கட்டாயமாக யோசிக்க வேண்டிய விஷயமாகும்.

கடந்த ஆண்டின் தொடக்கத்தில்.இத்தாலியில் செய்யப்பட்ட ஆராய்ச்சியில் போதுமான தூக்கம் கிடைக்காத போது மூளை தன்னைத்தானே அழித்துக்கொள்ளத் தொடங்குவதாக கண்டறிந்துள்ளனர். எனவே, இந்த விடயங்களை நாம் கருத்தில் கொண்டு எந்நாளும் போதியளவு (7 முதல் 8 மணிநேரம்) தூக்கத்தைப் பெற முயற்சிக்க வேண்டும்.

# இடுப்பில் உள்ள கொழுப்பை குறைக்கும் எளிய உடற்பயிற்சி

இடுப்புப் பகுதியில், தோலுக்கு அடியில் 'சப்ஜடேனியஸ்' எனும் கொழுப்பு இருக்கிறது. இடுப்புப் பகுதிக்கு எந்த வேலையும் கொடுக்காதபோது, இக்கொழுப்பானது கரையாமல் தங்கி, இடுப்புச் சதைப் பகுதி பெருத்துப் போவதற்குக் காரணமாகிவிடுகிறது.



இதைத் தவிர, மரபு ரீதியாகவும் இடுப்பு பருமன் ஏற்பட வாய்ப்பு உண்டு. பிரசவத்துக்குப் பிறகு, சில பெண்களுக்கு ஏற்படும் ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன் மாற்றங்களாலும் இடுப்பில் சதை போட்டுவிடும். சிறிது கவனம் எடுத்துக் கொண்டாலே போதும். இந்தப் பிரச்சனைக்கு 2 எளிய பயிற்சிகள் உள்ளன. அவை

**ஒரு சேரில் அமர்ந்திருப்பது போன்ற நிலையில் உடலை நிறுத்திக்கொண்டு, இரண்டு கைகளையும் நேராக நீட்டியபடி, எழுந்து எழுந்து உட்காரவும். இந்தப் பயிற்சி, கொழுப்பைக் கரைய வைத்து, ரத்த ஓட்டத்தை சீராக்க உதவும்.**

**தரையில் மல்லாந்து படுத்துக் கொண்டு, இடது காலை மட்டும் மடக்கி, அப்படியே வலது பக்கமாக சாய்ந்து படுக்கவும். சில விநாடிகள் கழித்து, மடக்கிய காலை நீட்டி, வலது காலை மடக்கவும். இப்படி 25 தடவை செய்த பிறகு, இரண்டு கால்களையும் மடக்கியபடியே இடதுபக்கமாக சாய்ந்து படுத்து, முன்பு செய்தது போலவே ஒவ்வொரு காலையும் மாற்றி மாற்றி மடக்கவும்.**

**இதையும் 25 தடவை செய்யவும். இப்படி தினமும் செய்வதால், இடுப்பின் அமைப்பு கட்டுக்கோப்பாக இருக்கும். இந்த இரு பயிற்சிகளை தினமும் வீட்டில் செய்த வந்தால் விரைவில் நல்ல பலனை காணலாம்.**

# இந்திய விஜயத்தை நிறைவு செய்து நிதி அமைச்சர் நாடு திரும்பினார்

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஸ இந்தியாவிற்கான தனது 02 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை நிறைவு செய்து அன்று (18) பிற்பகல் நாடு திரும்பினார். அமைச்சரின் இந்த விஜயத்தின் போது இந்தியாவுடனான 01 பில்லியன் டொலர் கடன் வசதிக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஸ, இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இந்திய அமைச்சர்கள் சிலரை சந்தித்து இருதரப்பு கலந்துரையாடலிலும் ஈடுபட்டிருந்தார். நிதியமைச்சின் செயலாளர் S.R. ஆட்டிகலவும் நிதியமைச்சருடன் இந்திய விஜயத்தில் கலந்துகொண்டிருந்தார்.



## யுக்ரேன் அதிபர் ஸெலென்ஸ்கி அமெரிக்க நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை

யுக்ரேன் அதிபர் ஸெலென்ஸ்கி அமெரிக்க நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில், ரஷ்யா என்னுடைய நாட்டை மட்டும் தாக்கவில்லை எனவும், "எங்களுடைய நன்மதிப்புகள் மீது மிருகத்தனமான தாக்குதலை நடத்தியிருக்கிறது," எனவும் தெரிவித்தார். மேலும், யுக்ரேன் வான் பரப்பை 'நோ ஃப்ளை சோன்'ஆக (வான் பரப்பில் விமானம் பறக்கத் தடை) அறிவிப்பது குறித்தும் ஸெலென்ஸ்கி மீண்டும் வலியுறுத்தினார். "இதனை கேட்பது அதிகப்படியானதா?" என அவர் கேள்வி எழுப்பினார்.

மேலும், இந்த போரில் இதுவரையிலான அமெரிக்க ஆதரவுக்கு யுக்ரேன் அதிபர் அமெரிக்காவுக்கு நன்றி தெரிவித்தார். இந்த போரில் உதவியது மற்றும் துணைநின்றமைக்காக, அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் "தனிப்பட்ட ஈடுபாடு" குறித்தும் ஸெலென்ஸ்கி சுட்டிக்காட்டினார்.

ஆனால், இதுகுறித்து அமெரிக்க நாடாளுமன்றம் பல விஷயங்களை செய்ய வேண்டும் எனவும், "ரஷ்ய ராணுவம் தாக்குதலை நிறுத்தும்வரை" அந்நாட்டுக்கு எதிராக பல தடைகளை விதிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார். ரஷ்யாவில் உள்ள அனைத்து அரசியல்வாதிகளுக்கு எதிராகவும் தடை விதிக்க வேண்டும் என ஸெலென்ஸ்கி பரிந்துரைத்தார். "ரஷ்ய சந்தையிலிருந்து அனைத்து அமெரிக்க நிறுவனங்களும் உடனடியாக வெளியேற வேண்டும். ஏனெனில், அதில் எங்களின் ரத்தக்கறை படிந்துள்ளது" என ஸெலென்ஸ்கி கூறினார்.



# விளையாட்டு செய்திகள்



## CSK இன் புதிய விழியோ!

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் கிறிஸ் ஜோர்டன், ரவீந்திர ஜடேஜா, டுவைன் பிராவோ ஆகியோர் இணைந்தது பற்றிய அறிவிப்பை அணி நிர்வாகம் ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

ஐபிஎல் 2022 நெருங்கி வரும் நிலையில் அனைத்து அணிகளும் சமூக ஊடகங்களில் தொடர்ச்சியாக இயங்கி வருகின்றன. சர்வதேச அணிகளிலிருந்து ஐபிஎல் அணியுடன் இணையும் வீரர்கள், பயிற்சியாளர்கள் குறித்த அறிவிப்புகள் அவ்வப்போது வெளியாகி வருகின்றன.

சென்னை சூப்பர் கிங்ஸீம் இதுபோன்ற அப்டேட்களை வெளியிட்டு வருகிறது. சமீபத்தில் ருதுராஜ் கெய்க்வாட் அணியுடன் இணையும் விடியோவை வெளியிட்டிருந்தது.

தற்போது "ஜேஜேஜே" என 3 அப்டேட்களை அறிவித்துள்ளது சென்னை சூப்பர் கிங்ஸ் நிர்வாகம். ஐபிஎல் ஏலத்தில் தேர்வான கிறிஸ் ஜோர்டன், அணியுடன் இணைந்துள்ள புகைப்படம் ட்விட்டரில் வெளியிடப்பட்டுள்ளது. டுவைன் பிராவோவும், தான் திரும்பிவிட்டதாகக் கூறிய செய்தியை சிஎஸ்கே நிர்வாகம் புகைப்படத்துடன் பதிவிட்டுள்ளது.

இவற்றுக்கிடையே, விசில் அடித்து "விசில் போடு" என்று ரவீந்திர ஜடேஜா கூறும் விடியோவும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இவை ரசிகர்களால் அதிகம் பகிரப்பட்டு வருகின்றன.

## இந்தியன் வெல்ஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ்: நடால்- அல்கராஸ் கார்ஃபியா அரையிறுதிக்கு முன்னேற்றம்!

இந்தியன் வெல்ஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரின், ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டிகளில் ஸ்பெயினின் ரபேல் நடாலும், ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ் கார்ஃபியாவும் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

முதல் காலிறுதிப் போட்டியில், ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ் கார்ஃபியாவும் பிரித்தானியாவின் கேமரூன் நோரியும் பலப்பரீட்சை நடத்தினர்.

பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், அல்கராஸ் கார்ஃபியா, 6-4, 6-3 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

இரண்டாவது காலிறுதிப் போட்டியில், ஸ்பெயினின் ரபேல் நடாலும், அவுஸ்ரேலியாவின் நிக் கிர்கியோசும் மோதினர்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், 7-6, 5-7, 6-4 என்ற செட் கணக்குகளில் நடால் வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதிபெற்றார்.



## பெய்ஜிங் பரா ஒலிம்பிக் 2022: பதக்க பட்டியலில் முதலிடத்துடன் நிறைவுசெய்தது சீனா!

பெய்ஜிங்கில் நடைபெற்ற பரா ஒலிம்பிக் தொடரில், சீனா 18 தங்க பதக்கங்களுடன் முதலிடத்தை பிடித்து தொடரை நிறைவுசெய்துள்ளது.

18 தங்க பதக்கங்கள், 20 வெண்கல பதக்கங்கள், 23 வெள்ளி பதக்கங்களுடன் மொத்தமாக 61 பதக்கங்களுடன் சீனா முதலிடத்தை பிடித்தது.

11 தங்க பதக்கங்கள், 10 வெண்கல பதக்கங்கள், 8 வெள்ளி பதக்கங்களுடன் மொத்தமாக 29 பதக்கங்களுடன் உக்ரைன் இரண்டாவது இடத்தை பிடித்தது.

18 தங்க பதக்கங்கள், 6 வெண்கல பதக்கங்கள், 11 வெள்ளி பதக்கங்களுடன் மொத்தமாக 25 பதக்கங்களுடன் கனடா மூன்றாவது இடத்தை பிடித்தது.

7 தங்க பதக்கங்கள், 3 வெள்ளி பதக்கங்கள், 2 வெண்கல பதக்கங்கள் என மொத்தமாக 12 பதக்கங்களுடன் பிரான்ஸ் நான்காவது இடத்தை பிடித்தது.

4 தங்க பதக்கங்கள், 11 வெண்கல பதக்கம், 3 வெள்ளி பதக்கங்களுடன் மொத்தமாக 20 பதக்கங்களுடன் அமெரிக்கா ஐந்தாவது இடத்தை பிடித்தது.

ஒஸ்திரியா, ஜேர்மனி, நோர்வே, நோர்வே, ஆகிய நாடுகள் முறையே ஆறு முதல் பத்து இடங்களை பிடித்துள்ளன.




## மகளிர் உலகக் கிண்ணம் - அவுஸ்திரேலியா ஆதிக்கம்!

மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் 14 ஆவது ஆட்டத்தில் அவுஸ்திரேலியா 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகளை வென்றது. இத்துடன் 4 ஆட்டங்கள் விளையாடியிருக்கும் அவுஸ்திரேலியா அனைத்திலும் வென்றுள்ளது. அதே எண்ணிக்கையிலான ஆட்டங்களில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு இது 2 ஆவது தோல்வியாகும்.

வெலிங்டனில் செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் மேற்கிந்தியத் தீவுகள் 45.5 ஓவர்களில் 131 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. பின்னர் அவுஸ்திரேலியா 30.2 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 132 ஓட்டங்கள் அடித்து வென்றது. அந்த அணி வீராங்கனை எலிஸ் பெரி ஆட்டநாயகி ஆனார். நாணய சுழற்சியை வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகளில் தலைவர் ஸ்டெஃபானி டெய்லர் 50 ஓட்டங்கள் விளாச, அவுஸ்திரேலிய பௌலிங்கில் எலிஸ் பெரி, ஆஷ்லே கார்டனர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகள் சாய்த்தனர். பின்னர் அவுஸ்திரேலிய இன்னிங்ஸில் ரேச்சல் ஹெய்ன்ஸ் 83 ஓட்டங்கள் விளாசி அணியை வெற்றிக்கு வழி நடத்தினார். மேற்கிந்தியத் தீவுகளில் ஹேலி மேத்யூஸ், ஷமிலியா கானெல், ஷின்னெல் ஹென்ரி ஆகியோர் தலா 1 விக்கெட் எடுத்தனர்.





# உலக பார்வை



## ரஷ்ய ஜனாதிபதி ஒரு போர்க்குற்றவாளி- பைடன்

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் யுத்த குற்றவாளியென அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்துள்ளார். வெள்ளை மாளிகையில் செய்தியாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கையில் பைடன் இதனை தெரிவித்துள்ளார். ஜனாதிபதி அவர்களே நாங்கள் அனைத்தையும் பார்த்துள்ள நிலையில் நீங்கள் தற்போது புட்டினை ஒரு யுத்த குற்றவாளி என அழைப்பதற்கு தயாரா என செய்தியாளர் கேள்வி எழுப்பியுள்ளார். இல்லை என முதலில் தெரிவித்த அவர் பின்னர் செய்தியாளர் மீண்டும் கேள்வி எழுப்பியவேளை நான் அவரை யுத்த குற்றவாளி என தெரிவிப்பேனா என்றா கேட்டீர்கள்?நான் அவர் யுத்தக்குற்றவாளி என்றே கருதுகின்றேன் என தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதியின் இந்த கருத்து குறித்து பின்னர் தனது கருத்தினை வெளியிட்டுள்ள வெள்ளை மாளிகை ஜனாதிபதி தனது இதயத்தின் ஆழத்திலிருந்து அதனை தெரிவித்துள்ளார் என குறிப்பிட்டுள்ளது. உக்ரைனில் நிகழும் காட்டுமிராண்டித்தனங்களின் படங்களை பார்த்தபின்னர் ஜனாதிபதி தனது இதயத்தின் ஆழத்திலிருந்து அதனை தெரிவித்துள்ளார் என குறிப்பிட்டுள்ள வெள்ளை மாளிகை பைடன் உத்தியோகபூர்வ அறிவிப்பு எதனையும் வெளியிடவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளது. யுத்த குற்றங்கள் குறித்து தீர்மானிப்பதற்காக அமெரிக்க இராஜாங்க திணைக்களங்கள் தனியான நடைமுறைகளை பின்பற்றுகின்றது அது இடம்பெறுகின்றது எனவும் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

### உக்ரைனில் இருந்து வரும் அகதிகளுக்கு வேல்ஸ் முழுவதும் இலவச இரயில் சேவை!

உக்ரைனில் இருந்து வரும் அகதிகள் இனி வேல்ஸ் முழுவதும் இரயில் சேவைகளில் இலவசமாக பயணம் செய்யலாம் என முதலமைச்சர் மார்க் டிரேக்ஃபோர்ட் அறிவித்துள்ளார். இதுகுறித்து முதலமைச்சர் மார்க் டிரேக்ஃபோர்ட் கூறுகையில், 'வேல்ஸ் எங்கள் உதவி தேவைப்படுபவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் புகலிடம் என்பதை காட்டும் மற்றொரு நடவடிக்கை. வேல்ஸிக்கு வரும் உக்ரைனியர்களுக்கு அன்பான வரவேற்பு உள்ளது. பிரித்தானிய அரசாங்கத்தின் உக்ரைனுக்கான வீடுகள் திட்டத்திற்கு வேல்ஸ் ஒரு சுப்பர் ஸ்பான்சராக மாற விரும்புகிறது என்பதில் நான் பெருமைப்படுகிறேன். இது மூன்று வருடங்கள் வரை பிரித்தானியாவுக்கு மக்கள் வருவதற்கு பாதுகாப்பான வழியை வழங்கும்' என கூறினார்.

உக்ரைனிய குடிமக்கள் இலவச பயணத்தை கோருவதற்கு. நடத்துனர்கள் மற்றும் நிலைய ஊழியர்களிடம் தங்கள் கடவுச்சீட்டை காட்ட வேண்டும். பிரித்தானிய அரசாங்கத்தின் திட்டத்தின் ஒரு பகுதியாக உக்ரைனிய அகதிகளுக்கு 10.000 குடும்பங்கள் வீடு கட்ட விருப்பம் தெரிவித்துள்ளதாக வேல்ஸ் செயலர் சைமன் ஹார்ட் கூறியதற்கு பிறகு இந்த செய்தி வந்துள்ளது. இலவச இரயில் பயண முன்முயற்சியானது, வேல்ஸில் உள்ள புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு இலவச பொதுப் போக்குவரத்தை வழங்கும் தற்போதைய வேல்ஸ் அரசாங்கத் திட்டத்தின் விரிவாக்கமாகும்.

## ஜோ பைடன் ஹிலாரி கிளின்டன் உட்பட 12 பேருக்கு எதிராக தடைகளை அறிவித்தது ரஸ்யா

**அமெரிக்க ஜனாதிபதி உட்பட 12 அதிகாரிகளிற்கு எதிராக தடைகளை விதித்துள்ளதாக ரஸ்யா அறிவித்துள்ளது. அமெரிக்க ஜனாதிபதி அமெரிக்க இராஜாங்க செயலாளர் அமெரிக்காவின் பாதுகாப்பு செயலாளர் வெள்ளை மாளிகை பேச்சாளர் உட்பட 12 பேருக்கு எதிராக தடைகளை விதித்துள்ளதாக ரஸ்யாஅறிவித்துள்ளது.**

**ரஸ்யா வெளியிட்டுள்ள பட்டியலில் முன்னாள் இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டனின் பெயரும் ஜனாதிபதி ஜோ பைடனின் மகனின் பெயரும் இடம்பெற்றுள்ளதை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. எனினும் இந்த தடை அவசியமான உயர்மட்ட பேச்சுவார்த்தைகளை பாதிக்காது என ரஷ்யா தெரிவித்துள்ளது.**

## எரிபொருள் விலை 18% அதிகரிப்பு!

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் 3-வது அலையின் தாக்கம் தற்போது குறைந்து வருகிறது. இதனால் நாடுகளுக்கு இடையிலான விமான போக்குவரத்து சேவை மீண்டும் முழுவீச்சில் இயங்கி வருகிறது. விமான சேவைகளுக்கான கட்டணமும் பெரிதாக உயர்த்தப்படாமல் இருந்து வந்தன. இதற்கிடையே உக்ரைன் மீது ரஷியா போர் தொடுத்ததை தொடர்ந்து பெரும்பாலான நாடுகளில் மீண்டும் பொருளாதார சீர்குலைவு ஏற்பட்டது. கச்சா எண்ணெயின் விலையோடு விமான எரிபொருள் விலையும் உயர்ந்து வருகிறது. போர் தொடங்கியதில் இருந்து விமானங்களில் பயன்படுத்தப்படும் ஏ.டி.எப். எனும் பெட்ரோலிய எரிபொருள் விலை தாறுமாறாக உயர்ந்து வருகிறது. விமான எரிபொருளின் விலை நேற்று 18 சதவீதம் உயர்ந்துள்ளது. ஏ.டி.எப். விலை கிலோ லிட்டருக்கு ரூ.17,135.63 (18.3 சதவீதம்) அதிகரிக்கப்பட்டு ரூ.1,10,666.29 ஆக உயர்ந்தது. நடப்பாண்டில் விமான எரிபொருளின் விலை அதிகரிக்கப்படுவது இது 6-வது முறை ஆகும்.

மேலும் விமான எரிபொருளின் விலை கிலோ லிட்டர் ரூ.1லட்சத்தை தாண்டி உள்ளது. வரலாற்றில் இதுவே முதல்முறை ஆகும். சர்வதேச சந்தை நிலவரங்களுக்கு ஏற்ப விமான எரிபொருட்களின் விலை ஒவ்வொரு மாதமும் 1 மற்றும் 16-ந்திகதிகளில் மாற்றி அமைக்கப்படுகிறது. கடந்த வாரத்தில் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை 14 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு பீப்பாய் 140 டாலராக அதிகரித்தது. இதனை கருத்தில் கொண்டே இந்த விலை உயர்வை பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்துள்ளன. ஒரு கிலோ லிட்டர் ஏ.டி.எப். விலை டெல்லியில் ரூ.1,09,119.83 ஆகவும், கொல்கத்தாவில் ரூ.1,14,979.7 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டன. விமான நிறுவனங்கள் 40 சதவீதம் வரை எரிபொருளுக்காக செலவிடுகிறது. விமான எரிபொருட்களின் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளதால் விமான டிக்கெட் கட்டணங்கள் உயருகிறது. உள்நாட்டு கட்டணம், வெளிநாட்டு கட்டணங்களை மாற்றி அமைத்து விமான நிறுவனங்கள் கட்டண விவரங்களை வெளியிட உள்ளது. அதன்பிறகே விமானங்களின் கட்டணங்கள் எவ்வளவு உயர்ந்துள்ளது என்பது தெரியவரும்

## ஜப்பானில் பாரிய பூகம்பம் – சுனாமி எச்சரிக்கை

ஜப்பானின் வடகிழக்கை தாக்கியுள்ள பாரிய பூகம்பம் காரணமாக சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள அதேவேளை இரண்டு மில்லியன் வீடுகளிற்கான மின்விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

புகுசிமாவில் மையம் கொண்டிருந்த பூகம்பம் 7.3 ஆக பதிவாகியுள்ளது.





## மியன்மாருக்கு இராணுவ உதவிகளை வழங்குவதற்கு சீனா பாகிஸ்தானை பயன்படுத்துகின்றது

மியன்மாருக்கு இராணுவ உதவிகளை வழங்குவதற்கு சீனா பாகிஸ்தானை பயன்படுத்துகின்றது. பாகிஸ்தான் இராணுவத்தினருக்கும் மியன்மார் இராணுவத்திற்கும் இடையிலான ஒத்துழைப்பு தென்கிழக்கு ஆசிய நாட்டில் இராணுவபுரட்சிக்கு பிந்தைய சூழலை மாற்றியமைத்துவருவதுடன் பிராந்திய பாதுகாப்பிற்கு பெரும் ஆபத்தாக மாறியுள்ளது.

பாகிஸ்தானிடமிருந்து மியன்மார் இராணுவம் 60 - மற்றும் 80 எம்எம் மோட்டர்கள்- எம் 79 கிரனைட் லோஞ்சர்கள்,மற்றும் துப்பாக்கிகளை கொள்வனவு செய்ய முயல்கின்றது என தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தியாவின் கிழக்கு பகுதி அயல்நாடு பாகிஸ்தானிடமிருந்து விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும் கொள்வனவு செய்ய முயல்கின்றது. 2018 இல் மியன்மாரின் ஆயுதபடையினர் 560 மில்லியன் அமெரிக்க டொலருக்கு 16 ஜேஎவ்- 1716 JF-17 Thunder விமானங்களை கொள்வனவு செய்திருந்தது.பாகிஸ்தானின் எரோனோட்டிகல் கொம்பிளக்சும்,சீன நிறுவனமும் இணைந்து இந்த விமானத்தை உருவாக்கியிருந்தன.

இந்த உடன்படிக்கை சாத்தியமாவதற்கு International Gateways Group நிறுவனத்தை சேர்ந்த பிரபல ஆயுத விற்பனை புள்ளியானDr Naing Htut Aung. என்பவரே காரணம் எனவும் இந்த நிறுவனம் சீனாவின் தற்போதைய இராணுவ தளபதி உட்பட இராணுவத்துடன் நெருங்கிய தொடர்புகளை பேணுகின்றது எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனை தொடர்ந்து கடந்த வருடம் செப்டம்பர் மாதம் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சின் பத்துபேர் கொண்ட உயர்மட்ட குழுவினர் மியன்மார் பாதுகாப்பு அமைச்சருடன் முன்கூட்டியே அறிவிக்கப்படாத சந்திப்பொன்றை மேற்கொண்டதுடன் வகை விமானங்கள் மற்றும் விமானங்களை தாக்க கூடிய ஏவுகணைகளின் விற்பனை குறித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனர். மேம்பட்ட ஒழுங்குமுறை தொழில்நுட்பம்,விமானபழுதுபார்ப்பு-மற்றும் கடற்படை வெடிமருந்துகள் குறித்தும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

பாகிஸ்தான் சீன கூட்டணியின் இந்த பின்னணியில்-சீனாவின் தயாரிக்கப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை பாகிஸ்தான் பேணுவதை சீனா ஊக்குவிக்கின்றது- பாதுகாப்பு விற்பனைக்கான வழியாக பாகிஸ்தானின் பாதுகாப்பு தொழில்துறையை சீனா மாற்றுகின்றது என்ற கருத்து உருவாகிவருகின்றது. 2019-2020இல் சீனாவின் ஆயுத ஏற்றுமதி 5.5 லிருந்து 5.2 ஆக வீழ்ச்சியடைந்தது என ஸ்டொக்கோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

ஆனால் சீனாவின் ஆயுத ஏற்றுமதிகள் வேறுவழியில் செல்கின்றன அல்லது குறைவான விபரங்களே வெளியிடப்படுகின்றன என்ற கருத்தும் காணப்படுகின்றது. பாகிஸ்தானிற்கு சென்றுகொண்டிருந்த சீன கப்பலை 2020 இல் இந்திய கடற்படை தடுத்து நிறுத்தியவேளை ஆட்டோகிளவ் எனப்படும் இரண்டு பயன்பாட்டு தொழில்நுட்ப உலர்த்தி காணப்பட்டது சிறந்த உதாரணம். சீனா தொடர்ந்தும் மியன்மாரின் இராணுவ ஆட்சியாளர்களுடன் பேச்சுவார்த்தைகளை பேணுகின்றது.அதேவேளை சர்வதேச அளவில் தனது பெயரை காப்பாற்றிக்கொள்வதற்காக கடந்த வருடம் பெப்ரவரி 21 ம் திகதி சதிப்புரட்சியில் தனக்கு எந்த தொடர்புமில்லை என சீனா தெரிவித்து வருகின்றது.

தான் நேரடியாக தொடர்புகொள்ளாமல் பாக்கிஸ்தானை இடைத்தரகராக பயன்படுத்தும் சீனா கொரோனா பெருந்தொற்றிற்கு பின்னரான சூழ்நிலையில் தன்னை பற்றிய எதிர்மறையான உணர்வுகள் அதிகரிப்பதை தவிர்க்க முயல்கின்றது. இது சீனா ஏனையவர்களின் கவனத்தை ஈர்க்காமல் இராணுவ உபகரணங்களை விற்பனை செய்வதற்கும் புதிய சந்தைகளை கண்டறிவதற்கும் உதவும்.

































இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 20.03.2022 அன்று வெளியிடப்பட்டது.